# சமூகக் கல்வியும் வரலாறும்

ஆண்டு 7



# சமூகக்கல்வியும் வரலாறும்

## ஆண்டு - 7

சமூகக்கல்வி மன்றம்
வன்னி.
**1999**

# முன்னுரை

சிறீலங்கா அரசின் பாடத்திட்டத்தின் கீழ் பள்ளிகளில் இதுவரை கற்பிக்கப்பட்டு வரும் வரலாற்றுப்பாடநூல்கள் உண்மையான வரலாறாக அமையாமல் சிங்கள இனத்தை மேன்மைப்படுத்தக்கூடிய வகையிலே மிகைப்படுத்தியும், தமிழ்மக்கள் பெருமைகளை மறைத்தும், தமிழ்மக்களை இழிவு படுத்தும்வகையிலே திரித்தும் எழுதப்பட்டுள்ளன.

இந்தநாடு சிங்கள பௌத்தர்களுக்கு மட்டும் உரியநாடென்றும் அவர்களது வரலாறே ஈழத்து வரலாறென்றும் சிங்களவரால் சிங்களவர்களுக்காகச் சிங்கள மொழியில் எழுதப் பட்ட ஆக்கங்களின் தமிழ்மொழி பெயர்ப்பே தமிழ் மாணவர்களுக்கு ஈழத்து வரலானெக் கற்பிக்கப்பட்டுவருகிறது.

சிறப்பும் மேன்மையும் மிக்க வரலாற்றைக்கொண்ட இனம் அந்த வரலாற்றாற் பெரு மையடைகிறது. அத்தகைய வரலாறு அந்த இனத்தின் வளர்ச்சிக்கு வழிகாட்டுகிறது. பெருமை மிக்க பண்டை வரலாற்றைக்கொண்ட ஈழத்தமிழினத்தின் இன்றைய மாண வர்கள் தமது வரலாற்றைக் கற்பதும் தெரிந்துகொள்வதும் அதனூடாக அவர்கள் வளர்ச் சியைப் பெறுவதும் சிங்கள ஆட்சியாளரால் திட்டமிட்டு மறுக்கப்படுகிறது. அதுமட்டு மன்றி, ''உனது இனம் இந்த மண்ணை ஆக்கிரமிக்க வந்த இனம், இந்த மண்ணில் அக்கிரமம் புரிந்த இனம், கள்ளத்தோணியில் வந்த இனம், அடிமை இனம்'' எனத் தமிழி னத்தை இழிவுபடுத்துகின்றன. பொய்யான வரலாறு தமிழ்மாணவர்கழுக்குப் புகட்டப் படுகிறது.

இத்தகைய கல்வியினால் தமிழ்மாணவர்கள் தன்னம்பிக்கையோ நாட்டுப்பற்றோ அற்றவர்களாக வாழும் நிலை இருந்துவருகிறது. இனத்துக்கு வழிகாட்டும் வரலாற்றுக் கல்விக்கு இந்த நிலை என்றால் சமூகவாழ்க்கையை நெறிப்படுத்தும் நோக்கோடு சிறீலங்கா அரசால் கற்பிக்கப்படும் சமூகக்கல்வியினூடாகத் தமிழ்மாணவர்கள் தமது நாட்டின் நீர்வளநிலவளங்களையோ சமூக அறிவையோ வாழ்க்கையை நெறிப்படுத்தக்கூடிய அறி வையோ பெறமுடியவில்லை. தமிழினம் சிங்களவர்க்கு அடங்கி அடிமையாக வாழ வைப்பதற்கேற்ற வகையிலேயே சமூகக்கல்விபாடதிட்டம் பாடப்பரப்புகள் திட்டமிடப் பட்டு ஆக்கப்பட்டு உள்ளன.

எனவேதான் இன்றைய வரலாறு சமூகக்கல்வி பாடங்களில் தமிழ் மாணவர்களுக்கு நாட்டமோ ஆர்வமோ ஏற்படவில்லை. தேர்வுகளில் புள்ளி பெறுவதற்கென்ற ஒரே நோக் கிலேயே இப்பாடங்களைத் தமிழ்மாணவர்கள் படிக்கின்றனர்.

தமிழ்மாணவர்களின் வாழ்க்கைக்கு வழிகாட்டக்கூடியதாகவும் சமூகவாழ்வை நெறிப் படுத்தக்கூடியதாகவும், பொதுத் தேர்வுகளுக்கு ஊறுநேராத வகையிலும் 6, 7 ,8 ஆம் ஆண்டு மாணவர்களுக்கு, ''சமூகக்கல்வியும் வரலாறும்'' என்ற பாடநூலினூடாகச் சில பாட அலகுகளைச் சமூகக்கல்வி மன்றம் ஆக்கித்தந்திருக்கிறது.

இந் நூலை மாணவர்கள் துடிப்போடும், ஆர்வத்தோடும் கற்று அறிவையும் பயனை யும் பெறவேண்டும் என்பதே எமது எதிர்பார்ப்பும் வேணவாவுமாகும்.

— சமூகக் கல்வி மன்றம் —

## இயல் 1

# தமிழீழ மண்தொகுதிகளும் அவற்றின் பயன்பாடுகளும்

உலகிலுள்ள உயிரினங்கள் வாழ்வதற்கு மண் மிகவும் பயனுள்ள இயற்கை வளமாகும். மண் பயிர்களின் சிறப்பான வளர்ச்சிக்கு உதவுகின்றது. மண்ணின் தாயாகக் கருதப்படுவது பாறைகளேயாகும். தமிழீழத் தாயகத்தில் உள்ள மண்தொகுதிகள் பல்வேறு வகையான பாறை வகைகளிலிருந்து தோன்றியுள்ளன. இலங்கைத்தீவில் 14 வகையான மண்வகைகள் உள்ளதாகக் கணிக்கப்பட்டுள்ளது. இவற்றிலே 10 வகையான மண்வகைகள் எமது பகுதிகளிற் காணப்படுகின்றன. மண்தொகுதிகள் வேறுபடும் பொழுது அவற்றின் பௌதீக, இரசாயன இயல்புகளும் வேறுபடுகின்றன. மேற்படி மண்ணின் இயல்புகளுக்கமையவே பயிர்ச்செய்கை செய்ய முடியாத சில மண்வகைகள் தமிழீழத்திலே காணப்படுகின்றன. இம்மண் வகைகள் முதன்மையான கைத்தொழிற் கனிய வளமாகக் கருதப்படுகின்றன. அவற்றைப் பற்றி விரிவாக இறுதியில் அறிந்து கொள்வோம்.

தமிழீழ மண்ணின் கூறுகள் வகைப்படுத்தலின்படி பின்வருமாறு அடையாளங் காணப்பட்டுள்ளன.

1. செங்கபில மண்
2. கல்சியமற்ற கபிலநிற மண்
3. செம்மஞ்சள் லற்றசோல் மண்
4. உருமாறிய சொலனேட் மண்
5. றெகசோல் மண்
6. கிரம் சோல் மண் (கருங்களி)
7. குறைவடிகால் கொண்ட வண்டல்மண்
8. வண்டல் மண்
9. கடற்கரையிலே உள்ள சிலிக்கேற் மண்
10. இல்மனையிட் மண்

மேற்படி மண்வகைகளைத் தனித்தனியாக ஆராய்வோம்.

1. செங்கபில மண்:

அ. காணப்படும் இடம்:- வவுனியா மாவட்டம் முழுவதும் பரந்து காணப்படுகின்றது. அதனோடு அயல் மாவட்டங்களிலும் ஓரளவு உண்டு.

ஆ. மண்ணின் தன்மை:- செங்கபில நிறமுடையவை. உலர்ந்த நிலையிற் கடினமாகவும் ஈரமான நிலையிலே ஒட்டுந்தன்மை, புதையுந்தன்மை, வழுக்குந் தன்மையுடையதாகவும் இருக்கும். மண் குறுக்குவெட்டு முகத்தை நோக்கும் போது தெளிவாக வேறுபட்ட படைகளை அறியலாம். இம்மண்ணிலே நல்ல விளைச்சலையும் பெறலாம்.

2. கல்சியமற்ற கபிலநிற மண்:

அ. காணப்படும் இடங்கள்:-

மட்டக்களப்பு, அம்பாறை, கல்லோயாப் பகுதிகளிலே காணப்படுகின்றது.

ஆ. மண்ணின் தன்மை:- மணல் இருவாட்டி மண்ணாகும். இம்மண் ஓரளவு காரத்தன்மையுடையது. பசளைத் தன்மை குறைவு.

இ. பயிரிட ஏற்ற தாவரங்கள்:-

கூலப் (தானியப்) பயிர்கள், பருப்புப் பயிர்கள், கிழங்குப் பயிர்கள், மரக்கறிப் பயிர்கள், மிளகாய், வெங்காயம் போன்றவை.

3. செம்மஞ்சள் லற்றசோல் மண்:

அ. காணப்படும் இடங்கள்:-

தமிழீழத்திலே புத்தளம் தொடங்கிக் கரையோரமாக யாழ்ப்பாணம் வரை சென்று பின் கரையோரமாக முல்லைத்தீவு கொக்கிளாய் வரை பரந்துள்ளது. உலர்வலயத்திலே கிட்டத்தட்ட 1000. ச. மைல் பரந்துள்ளது.

ஆ. மண்ணின் தன்மை:- யாழ்ப்பாணத்திலே கல்சியத்தன்மை சேர்ந்துள்ளது. நல்ல நீர்வடிப்பும் காற்று அடக்கமும் உண்டு. இப்பகுதிகளிலே குழாய்க் கிணறு அமைத்துப் போதிய நீரினைப் பெற்றுப் பயிர்செய்ய முடியும்.

இ. பயிரிட ஏற்ற தாவரங்கள்:-

மிளகாய், வெங்காயம், தோடை, எலுமிச்சை, மா, பலா போன்றவை.

4. உருமாறிய செலனேட் மண்:

அ. காணப்படும் இடங்கள்:-

தமிழீழக் கடற்கரையை அண்டிய வெள்ளப் பெருக்கு ஏற்படும் பகுதிகளிலே காணப்படும். (ஆறுகளும் கடலும் கலக்கும் இடங்களில்) புத்தளம் - வண்ணாத்திவில்லு, மட்டக்களப்பு - தம்மன்கடுவ, முல்லைத்தீவு - கொக்கிளாய், ஆண்டாங்குளம், மன்னார் - ஆள்காட்டிவெளி, வெள்ளாங்குளம்.

ஆ. மண்ணின் தன்மை:- இம்மண் அவ்வளவு வளமானதல்ல.

இ. பயிரிட ஏற்ற தாவரங்கள்:-

புல் பயிரிட்டு, கால்நடை வளர்க்க ஏற்ற இடம்.

5. றேகசோல் மண்:

அ. காணப்படும் இடங்கள்:-

தமிழீழப் பகுதியின் கடற்கரைகளுக்கு அண்மித்த பகுதிகளிற் காணப்படுகின்றது.

ஆ. மண்ணின் தன்மை:- இம்மண் இருவாட்டித் தன்மையுடையது. நிலத்தடிநீர் நல்ல நிலையிலும் பயிருக்கு உகந்ததாகவும் காணப்படுகின்றது.

இ. பயிரிட ஏற்ற தாவரங்கள்:-

தென்னை, மர முந்திரிகை.

6. கிறம் சோல் மண் [கருங்களி மண்]

அ. காணப்படும் இடங்கள்:-

யாழ்ப்பாணத்தில் தென்மராட்சியிலே சில இடங்களிலும், முல்லைத்தீவு மாவட்டத்தில் துணுக்காயிலும், மன்னார் மாவட்டத்தில் முருங்கனிலும் கூடுதலாகக் காணப் படுகின்றது.

ஆ. மண்ணின் தன்மை - கடும் கறுப்பு நிறமுடையது. நீர்வடிப்பு மிகவும் குறைவு.

இ. பயிரிட ஏற்ற தாவரங்கள்:-

நீர்வழங்கல் (பாசன) உதவியுடன் நெல் பயிரிட ஏற்ற மண்.

7. வண்டல் மண் / குறைவடிகால் கொண்ட மண்:

அ. காணப்படும் இடங்கள்:-

பள்ளத்தாக்குகளிலும் தாழ் நிலங்களிலும் இம்மண் காணப்படுகின்றது. முல்லை மாவட்டத்தில் தண்ணீருற்று, முள்ளிய வளைப் பகுதிகளிலும் 250 - 300 ஏக்கர் வரை உள்ளது. இந்நிலத்தில் 3 போகங் களிலும் நெல் பயிரிட முடியும்.

ஆ. மண்ணின் தன்மை:- நீர் வடிதல் மிகவும் குறைவு, மண்வள மும் குறைவு.

இ. பயிரிட ஏற்ற தாவரங்கள்:-

நெல், வல்லாரை, பொன்னாங்காணி, கங்கூன் போன்ற பயிர்கள்.

8. வண்டல் மண்:

அ. காணப்படும் இடங்கள்:-

முதன்மை ஆறுகள், மகாவலிகங்கைக் கரை, யான் ஓயா, மணலாறு, பேராறு, பாலி யாறு, கனகராயன் ஆறு, ஆற்றங்கரை - யோரங்களிலுள்ளது. சிற்றாறுகள் உள்ள இடங்களிலும் ஓரளவு காணப்படும்.

ஆ. மண்ணின் தன்மை:- சேதனப் பொருள் கூடுதலான வெள்ளப் பெருக்கு இல்லாத நேரத்தில், சிறப்பாக நீர் வடியுந்தன்மை உடையதாக இருக்கும்.


4
4
4
4
5
4
4
4
4
4
4

 கல்சியமற்ற கபிலநிற மண்

 செங்கபில மண்

 செம்மஞ்சள் லற்றசோலிக் மண் -

 கல்சியம் சேர்ந்த செம்மஞ்சள் லற்றசோலிக் மண்

4 குறைவடிகால் கொண்ட வண்டல் மண்

 றெகசோல் மண்

 கிறம் சோல் மண்

5 இல்மனைற் மண்

இ. பயிரிட ஏற்ற தாவரங்கள் -

சிறுபோகத்தில் துணை (உப) உணவுப் பயிர்கள் பல பயிரிடப்பட முடியும்.

மேற்படி மண் தொகுதிகள் காணப்படும் இடங்கள் அவற்றின் தன்மை, பயிர்ச்செய்கைத் தொடர்பு என்பவற்றைக் கற்றுக்கொண்ட நாம் பயிர்ச் செய்கையுடன் கூடுதலான தொடர்பில்லாத தமிழீழத்தின் ஏனைய மண் வகைகளைப் பார்ப்போம்.

1. கிறம் சோல் மண் (கருங்களி)

இம்மண் காணப்படும் இடம் பற்றி மேலே குறிப்பிடப்பட்டுள்ளது. இம்மண் பல்வேறு கைத்தொழில் முயற்சிகளுக்குப் பயன்படுத்தப்படும் முதன்மையான கனிய வளமாகக் கருதப்படுகின்றது.

அ. சீமெந்து ஆக்குவதற்கு (தயாரிப்பதற்கு)ப் பயன்படுகிறது.

ஆ மட்கலங்கள், செங்கற்கள், கூரையோடுகள், அடுப்புகள் மற்றும் மண்ணுருக்களை (சிலைகளை) ஆக்குவதற்குப் பயன்படுகிறது.

2 சிலிக்கேற் மண்:

இம்மண் புத்தளம், சிலாபம், நாகர்கோவில், முல்லைத்தீவு, திருகோணமலை, மட்டக்களப்புப் போன்ற இடங்களிற் காணப்படும். இம்மண் கடற் கரைக்கு மிக அண்மையாகக் காணப்படும். இம்மண்ணிற் பயிர்கள் சிறப் பாக வளர்வதில்லை.

அ. கண்ணாடிக் கலங்கள் மற்றும் கண்ணாடிப் பொருள்கள் செய்யப் பயன்படுத்தப்படும்.

ஆ. இலத்திரனியற் பொருட்கள் (உபகரணங்கள்) செய்யப்பயன்படுத் தப்படுகின்றது.

இ. மர அணைகலங்களை (தளபாடங்களை) மினுக்கப் பயன்படுத்தப் படும் மணற் கடதாசியை ஆக்க உதவும்.

3. இல்மனைட் மண்:

இம்மண் தமிழீழத்திலே திருகோணமலை மாவட்டத்தில் புல்மோட் டைக் கடற்கரையோரத்திற் காணப்படுகின்றது. இம்மண் கறுப்பு நிறமாக இருக்கும். இம்மண்ணுடன் சேர்ந்து றூட்டைல், சேகோன் என்னும் மண் வகைகளும் கலந்துள்ளன. இம்மண் வகைகளைத் தமிழீழப் பகுதிகளி லிருந்து யப்பானுக்கு ஏற்றுமதி செய்கிறது இலங்கை அரசு. இதனால் பெருமளவு வெளிநாட்டுப் பணமாற்றை (செலாவணியை) இலங்கை அரசு பெற்றுக்கொள்கிறது.

அ. இம்மண்ணிலிருந்து, பூச்சுச் சாயங்கள் (பெயின்ற் வகைகள்) உண் டாக்கப்படுகின்றன.

ஆ. றூட்டைல் மண்ணிலிருந்து ரைற்றேனியம் உண்டாக்கப்படுகின்றது.

மேற்படி மண் வகைகள் யாவும் தமிழீழத்தின் முதன்மையான கனிய வளங்களாகும். இவ்வளங்களைத் தமிழீழ மக்களாகிய நாம் பேணிக் காக்க வேண்டியது எமது தலையாய கடமையாகும். இயற்கை நிகழ்வுகளினாலும் மனித செயற்பாடுகளினாலும் இம்மண்வளத்துக்குத் தீங்கு ஏற்பட இட முண்டு. ஆதலினால், மண்காப்பு நடவடிக்கைகளைக் கையாண்டு எமது வளங் களை நாம் காத்துக்கொள்ளவேண்டும்.

பயிற்சி:-

1. தமிழீழத்தில் எத்தனை வகையான மண் வகைகள் காணப்டுகின்றன?
2. செங்கபில நிற மண் தமிழீழத்தில் எப்பகுதிகளிற் காணப்படுகின்றது?
3. கல்சியமற்ற கபில நிற மண் எப்பகுதிகளிற் காணப்படுகின்றது?
4. றெகசோல் மண்ணில் பயிரிட ஏற்ற தாவரங்கள் எவை?
5. கிறம் சோல் மண்ணின் தன்மை என்ன?
6. தமிழீழப் படத்தைக் கீறி அதில் மண்வளப் பரம்பலைக் குறிப்பிடுக?

# தமிழீழ நீர்வளங்களும் அவற்றின் பயன்பாடுகளும்

நீர் உலகிலுள்ள உயிரினங்கள் வாழ்வதற்கு மிகவும் இன்றியமையாத தொன்றாகும். உயிரியற் பல்வகைமை முதன்மையாக நீரிலேயே தங்கியுள்ளது. மழைவீழ்ச்சியினாலேயே இயற்கையாக நீர் கிடைக்கின்றது. மழை வீழ்ச்சி குறையும்போது மண்ணிலும் மற்றும் நீர் முதல்களிலும் (ஆறு, குளம், ஏரி, குட்டைகள்) நீர் குறைந்துபோகும். தாவரங்களிலும் விலங்குகளிலும் நீர் குறையும்பொழுது அவற்றின் கலங்களிலும் நீர்ச் சமநிலை சீர்கெடுகிறது. இதனால், தாவரங்கள் விலங்குகள் என்பனவற்றின் வளர்ச்சி குன்றும். சிலநேரங்களில் இறப்பும் ஏற்படும்.

உயிரினங்களுக்கு நீர் நேரடியாகவும் மறைமுகமாகவும் செல்வாக்குச் செலுத்துகின்றது. சில பழங்கள் வித்துக்கள் பரவுதல், மண் நுண்ணுயிர்களின் தொழிற்பாடு, நிலம் பண்படுத்தல் போன்ற செயற்பாடுகளில் நீர் மறைமுகமாகப் பங்காற்றுகின்றது. உயிரின வாழ்வுக்கு நீர் எவ்வளவு இன்றியமையாததோ, அதே நேரம் அளவுக்கு மிகையான நீரினால் இழப்பேற்படவும் இடமுண்டு.

தமிழீழப் பகுதியில் நன்னீர் வளங்கள் காணப்படும் அதே நேரம் உவர் நீரும் காணப்படுகின்றது. நன்னீர் மனிதனுக்குத் தேவையான பயிர்ச் செய்கைக்கும் நன்னீர் மீன் வளர்ப்புக்கும் இன்றியமையாததாக இருக்கின்றது. உவர்நீர் பயிர்ச்செய்கைக்கு உதவாதபோதும், உவர்நீரில் வாழும் மீன், இறால் நண்டு மற்றும் பல உயிரினங்கள் வாழ்வதற்கு ஏற்ற நீர்முதலாகும். தமிழீழப் பகுதியிலுள்ள உவர் நீர்வளம் முறையாகப் பயன்படுத்தப் படுமாயின் பலகோடி ரூபாக்கள் வெளி (அந்நிய) ச் செலாவணியாகத் திரட்டிக்கொள்ளமுடியும்.

பூமிக்கு நீர் மழையினால் இயற்கையாகக் கிடைக்கின்றது. இந்நீரைப் பேணிக்காத்துப் பயன்பெறவேண்டியது தமிழீழ மக்களாகிய எமது தலையாய கடமையாகும். தமிழீழம் முழுவதும் உலர் வலயப் பகுதியாகும். உலர் வலயமண், ஈரவலய மண்ணைவிட ஆழமானதாகவும் முதிர்ந்ததாகவும் உள்ளது. எனவே இவ்வுலர்வலய மண்ணே பயிர்ச்செய்கைக்கு ஆகக்கூடிய சிறப்புத்தன்மை வாய்ந்ததாகும். உலர்வலயப் பகுதியிற் சிறப்பான நீர் முகாமைத்துவம் மேற்கொண்டாற், கூடிய விளைச்சலைப் பெற்றுக்கொள்ள முடியும்.

தமிழீழப் பகுதியில் நீர் கிடைக்கும் வழிகளையும் நீர்வளங்களையும் பற்றிப் பார்ப்போம்.

இயற்கை வளங்கள்:

1. பருவப் பெயர்ச்சிக் காற்றினால் ஏற்படும் மழை:

அ) வடகீழ்ப் பருவப்பெயர்ச்சிக் காற்று. இக்காற்று வடகிழக்குப் பகுதிகளுக்கு, செப்ரெம்பர் மாதம் தொடக்கம் ஜனவரி மாதம்

வரை வீசுகின்றது. இக்காலத்திற் பெய்யும் மழையைக்கொண்டு பெரும்போகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

ஆ) தென்மேற்பருவப் பெயர்ச்சிக் காற்று: இக்காற்றினால் ஏப்ரல் தொடக்கம் ஜுலை வரை மழை கிடைக்கிறது.

மேற்காவுகை:

தமிழீழப் பகுதியிற் கதிரவன் உச்சங்கொடுக்கும் காலங்களில் மாலை நேரங்களில் இம்மழை பெய்கின்றது.

சூறாவளி:

பருவக்காற்றுகள் மாறுங்காலங்களிலும், தாழமுக்கம் ஏற்படும்போதும் சூறாவளி மழை கிடைக்கின்றது.

மேற்படி இயற்கையான காற்றுகள் வீசும்பொழுது பூமிக்கு மழை கிடைக்கின்றது. இப்பருவக் காலங்கள் இனங்காணப்பட்டுள்ளபடி பெரும்போக காலம், சிறுபோககாலம் என வகுத்துப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளலாமென அறிந்துகொண்டோம். சிலகாலங்களில் இயற்கையாகப் பெய்யும் மழைவீழ்ச்சி சீராகப் பெய்வதில்லை. மழையை நம்பிப் பயிர்ச்செய்கை செய்வோர் பெரும் இழப்புகளுக்குள்ளாக வேண்டியிருக்கும். மேற்படி இழப்புக்களைத் தவிர்த்துக்கொள்வதற்கு, குறைந்த கால அகவையுடைய பயிரினங்கள் வரட்சியைத் தாங்கக்கூடிய பயிரினங்களை நாட வேண்டியுள்ளது. மேற்படி பயிர்களிலிருந்து கூடிய விளைச்சலை எதிர்பார்க்கமுடியாது. சிலகாலங்களிற் குறைந்த நேரத்திற் கூடிய மழைவீழ்ச்சி கிடைக்கின்றது. பயிரின் தேவைபோக மிகுதி நீர் ஆற்றின் வழியே சென்று கடலிற் கலக்கின்றது இந்நீரைத் தேக்கவேண்டிய நிலைப்பாடு தமிழீழ மக்களாகிய எமக்கு இன்றியமையாததொன்றாகும்.

வீணாகக் கடலிலே கலக்கும் நீர் பண்டைக் காலத்திலிருந்தே தமிழீழத்தில் அணைக்கட்டுகள், குளங்கள் என்பன கட்டப்பட்டுப் பேணிக்காக்கப்பட்டு வந்துள்ளதைக் காணலாம். நீர்த்தட்டுப்பாடு ஏற்படும்பொழுது தேக்கி வைத்த நீரைப் பயிர்களுக்குப் பாய்ச்சிப் பயனைப் பெற்றுக்கொள்ளலாம். எஞ்சிய நீரை அடுத்துவரும் போகத்துக்குப் பயன்படுத்தவும் முடியும். மழைநீரை நிலத்திற் தேக்குவதால் செயற்கையாக வெட்டப்பட்ட கிணறுகளிலும் நீரின் மட்டம் சிறப்பாகப் பேணப்படும். அடுத்து நிறுத்திக் தேக்காவிடின் கிணறுகளிற்கூட நீர் பற்றாக்குறை ஏற்பட இடமுண்டு. கிணற்று நீர் தூய்மையான குடிநீராகப் பயன்படுகின்றது. கிணற்று நீரைக் கொண்டு பயிர்ச்செய்கையும் மேற்கொள்ளப்படுகின்றது

இயற்கையாகப் பெய்யும் மழைநீரைத் தேக்கித் திரட்டும் முறைகளைப் பார்ப்போம்.

1. குளங்கள்:

தமிழீழப்பகுதியில் இலங்கையரசு முறையாக நீர்வளத்தைப் பெருக்கவில்லை. தற்பொழுது தமிழீழத்தில் சிறிய நீர்வழங்கற் குளங்கள் எண்ணூற்று முப்பத்து மூன்றும், நடுத்தர நீர்வழங்கற் குளங்கள் எண்பத்தைந்தும் பெரிய நீர்வழங்கற் குளங்கள் முப்பத்தொன்றும் உள்ளன. இவற்றைவிடப் பல அழிகுளங்கள் காடுகளின் நடுவிற் காணக்கூடியதாக உள்ளன. எமது

தாயகத்திலே மிகப்பெரிய குளமாக அம்பாறை மாவட்டத்தில் சேனநாயக்க சமுத்திரமும் வடதமிழீழத்தில் இரணைமடுக்குளமும் அமைந்துள்ளன. எமது மக்களுக்குத் தேவையான நெல் விளைச்சலை 31 பெரிய நீர்வழங்கற் குளங்களிலிருந்து பெற்றுக்கொள்ளமுடியும். எஞ்சிய குளங்களின் கீழ் நெல் விளைச்சலை மேற்கொண்டு வெளிச் (அந்நியச்) செலாவணியை ஈட்டிக் கொள்ளமுடியும்.

குளத்து நீர் நெல் மற்றும் துணை (உப) உணவுப் பயிர்களுக்குப் பயன் படுத்தப்படுகின்றன. வடதமிழீழத்தில் முத்தையன்கட்டு, விசுவமடு, உடையார்கட்டுக் குளங்களிலிருந்து சிறுபோக காலத்தில் மிளகாய், வெங்காயம், நிலக்கடலை போன்ற பயிர்கள் பயிரிடப்படுகின்றன. தமிழீழத்திலுள்ள எல்லாக் குளங்களிலும் பலவகையான நன்னீர் மீன்கள் வாழ்கின்றன. அக் குளங்களிலே சிறந்த இன மீன்களை வளர்ப்பதனூடாகப் பெரும் பயனடையலாம். நன்னீர் மீன்கள் கடல் மீன்களைவிட ஒரு விழுக்காடு ஊட்டம்(ஒருவீதம் போசாக்கு) கூடியதாகக் கணிப்பிடப்பட்டுள்ளது.

2. அணைக்கட்டுகள்:

தமிழீழத்திலே 72 ஆறுகள், ஓடிக் கடலிலே கலக்கின்றன. இவற்றிலே வடதமிழீழத்தில் 34உம் தென்தமிழீழத்தில் 38உம் உள்ளன. மேற்படி ஆறுகளிற் சில மறிக்கப்பட்டு, குளங்களாக்கப்பட்டுள்ளன. பல ஆறுகள் மறிக்கப்படாமல் வீணாகக் கடலிலே கலக்கின்றன. இவ்வாறுகளுக்குக் குறுக்காக அணைக்கட்டுக்களைக் கட்டி, கால்வாய்களமைத்து முறையாக நீர் பாய்ச்சும் முறைகளைக் கையாண்டாற் கூடிய பயனைப் பெற்றுக்கொள்ளலாம்.

3. கிணறுகளமைத்தல்:

குளத்திலிருந்து நீர்பாய்ச்ச முடியாத இடங்களில் கிணறுகளை அமைத்து துலா அல்லது நீரிறைப்பான் (நீர்ப்பம்பி) களைக்கொண்டு நீர்பாய்ச்சிப் பயிர்ச் செய்கையை மேற்கொள்ளலாம். தமிழீழத்திலே புத்தளத்திலிருந்து மன்னாரூடாக யாழ்ப்பாணம் வரை சென்று, யாழ்ப்பாணத்திலிருந்து முல்லைத் தீவுப் பகுதிவரை செல்லும் கிட்டத்தட்ட 5 மைல்களுக்குட்பட்ட கரையோரப் பகுதிகளில் 60 மீற்றர் ஆழத்திலே சிறந்த நில நீரோட்டங் காணப்படுகின்றது. ஆழ்துழைக் கிணறுகளை அமைத்து நெல் மற்றும் துணை (உப) உணவுப் பயிர்களைச் சிறப்பாகப் பயிரிடலாம். ஒரு குழாய்க் கிணற்றிலிருந்து 10 ஏக்கர் நெற்பயிர்ச்செய்கை அல்லது 25 ஏக்கர் துணை (உப) உணவுப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளமுடியும். இவ்வகையான கிணறு வகைகளை மன்னார் மாவட்டத்தில் முருங்கன் மற்றும் பகுதிகளிற் காணலாம். இவ்விடங்களிலே நெற்பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது.

உவர் நீரினாற் கிடைக்கும் வளங்கள்:

உவர் நீரில் இறால், நண்டு மற்றும் உவர் நீர் உயிரினங்கள் விளைவதுடன் உவர் நீர் வற்றி ஆவியாகிப் போகின்றபோது கறியுப்பு (Nacl) மற்றும் பல்வேறு தேவைகளுக்கான வேதியல் (இரசாயன) உப்புகள் பெறப்படுகின்றன. இன்று தமிழீழப் பகுதியில் பல உப்பளங்கள் காணப்படுகின்றன. அவற்றில் ஆனையிறவு, புத்தளம் உப்பளங்கள் முதன்மையானவை. இவை தமிழீழத்தின் குறிப்பிடத்தக்க கனியவளங்களாகும்.

உவர் நீரில் கடற்கத்தாளை இயற்கையாக வளர்வதுண்டு. இக்கத்தாளை வகைகளிலிருந்து நீர்ப் (திரவப்) பசளை (கைப்போநெக்ஸ்) யை ஆக்கிக்கொள்ளலாம்.

மேற்படி தமிழீழ வளங்களை இனங்கண்டு முறையான நீர்முகாமைத் துவத்தை மேற்கொண்டால், தமிழீழம் செழிக்கும்.

## தமிழீழத்திலுள்ள முதன்மையான குளங்களும் ஆறுகளும்




| | குளங்கள் | | ஆறுகள் |
|---|---|---|---|
| 01. | இரணைமடு | — | கனகராயன் ஆறு |
| 02. | அக்கராயன்குளம் | — | அக்கராயன் ஆறு |
| 03. | வவுனிக்குளம் | — | பாலியாறு |

| | | | |
|---|---|---|---|
| 04. | முத்தையன்கட்டு | — | பேராறு |
| 05. | கணுக்கேணிக்குளம் | — | கோடாலிக்கல்லாறு |
| 06. | தண்ணிமுறிப்புக்குளம் | — | நாயாறு |
| 07. | உடையார்கட்டு | — | தேராவில் ஆறு |
| 08. | விசுவமடு | — | பிரமந்தனாறு |
| 09. | கட்டுக்கரைக்குளம் | — | அருவியாறு |
| 10. | அகத்திமுறிப்பு | — | அருவியாறு |
| 11. | பாவற்குளம் | | |
| 12. | மொறவேவாக்குளம் | | |
| 13. | கந்தளாய்குளம் | | |
| 14. | அல்லைக்குளம் | — | மகாவலிகங்கை |
| 15. | வாகநேரிக்குளம் | — | மாதுறு ஓயா |
| 16. | மாதுறுஓயா நீர்த்தேக்கம் | | |
| 17 | நவக்கிரி நீர்த்தேக்கம் | | |
| 18. | உன்னிச்சைக்குளம் | | |
| 19 | இறக்காமம் குளம் | | |
| 20. | சேனநாயக்க சமுத்திரம் | | |
| 21. | தப்போவ வெவா | | |
| 22. | கொட்டுக்கச்சிக்குளம் | | |

பயிற்சி:

1. நீர் குறைவதனால் தாவரங்களுக்கும் விலங்குகளுக்கும் ஏற்படும் தீங்கு என்ன?

2. உவர் நீரினாற் கிடைக்கும் நன்மைகள் என்ன?

3. தமிழீழத்தில் எக்காலத்திற் பெரும்போகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்படுகின்றது?

4. தமிழீழத்திற்கு மேற்காவுகை மழை எப்போது கிடைக்கின்றது?

5. பயிர்ச்செய்கையின்போது மழை சீராகப் பெய்யாததனால் ஏற்படும் இழப்புக்களை எவ்வாறு குறைக்கலாம்?

6. தமிழீழத்தில் பெரிய, நடுத்தர, சிறிய நீர்வழங்கற் குளங்கள் எத்தனை இருக்கின்றன?

7. தமிழீழத்தில் முதன்மையான ஆறுகளினதும் குளங்களினதும் பெயர்களில் ஒவ்வொன்றிலும் பத்தைக் கூறுக?

இயல் 3

# இலங்கைத்தீவிலே தமிழராட்சியும், மாட்சியும் - 1

## (கி. பி. 7 ஆம் நூற்றாண்டு வரை)

மகாவம்சமும் தமிழரும்:

பௌத்தநெறியை மேன்மைப்படுத்தும் நோக்கோடும் அதனைப் பின் பற்றும் சிங்கள இனத்தைப் பெருமைப்படுத்தும் நோக்கோடும் எழுதப்பட்ட மகாவம்சத்தில் பௌத்தநெறி சாராத அரசுகள், இனங்கள் பற்றிய செய்திகள் இருட்டடிப்புச் செய்யப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் அந்த மகாவம்சத்தை அடிப்படையாகக் கொண்டே தமிழர் தம் ஆட்சியின் தொன்மையை எடுத்துக் கூறிவிடமுடியும்.

விஜயன் இலங்கைத்தீவுக்கு வருகை தந்ததாகக் கூறப்படும் காலத்திற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்பே நாகதீபம், கல்யாணி ஆகிய இருபகுதிகளில் (தமிழினத்தின் தனி மரபினரான) இயக்கர், நாகர்களின் தனியரசுகள் சிறப்புற நிலவியதாக மகாவம்சம் குறிப்பிடுகின்றது. விஜயன் வருகையைத் தொடர்ந்து அனுராதபுர காலத்தின் தொடக்கத்தில் அனுராதபுர அரசு தவிர உருகுணை, கல்யாணி (களனி), மலையநாடு என தனியரசுகள் நிலவியமைபற்றியும் மகாவம்சம் ஆங்காங்கே எடுத்துக் கூறுகிறது. பௌத்தத்தின் சிறப்பை மட்டும் விதந்துரைக்கும் நோக்கோடு எழுதப்பட்டதால் மகாவம்சத்தில் அனுராதபுர அரசு பற்றி மட்டுமே தொடர்ச்சியாக எடுத்துக் கூறப்படுகிறது.

அனுராதபுர ஆட்சியிலும், தேரவாத பௌத்தநெறியைக் கடைப்பிடித்த மன்னன் ஆட்சிக்காலச் செய்திகளைத் தவிர ஏனையவர் ஆட்சிச்செய்திகள் பற்றி மகாவம்சத்திலெதுவும் குறிப்பிடப்படவில்லை என்றே கூறலாம். கூறியவற்றிலும் பல உண்மைகளை அது இருட்டடிப்புச் செய்துள்ளது.

பௌத்தநெறியின் வருகையோடு தொடர்புடைய தேவநம்பியதீசனின் 40 ஆண்டுகால நிகழ்வுகளை, பத்து இயல்களில் 686 சொற்றொடர்களில் எடுத்துக்கூறிய மகாவம்சம், 60 ஆண்டுகள் ஆட்சி செய்த அவன் தந்தை மூத்தசிவன் பற்றி 5 சொற்றொடர்களிலும் தேவநம்பியதீசனுக்குப்பின் அவன் தம்பியர் மூவர் ஆட்சி நடத்திய 30 ஆண்டுகாலம் இடையில் ஆட்சி நடத்திய சேனன் குத்திகனின் 22 ஆண்டுகள் உட்பட 52 ஆண்டுகாலத்தை 12 சொற்றொடர்களிலும் எடுத்துக்கூறுகிறது.

பௌத்தத்தின் வருகையையுள்ளடக்கிய 40 ஆண்டுகளை விளக்க 686 சொற்றொடர்களையும் அதற்கு முன்பின்னான 112 ஆண்டுகளை விளக்க 17 சொற்றொடர்களையும் பயன்படுத்தியதிலிருந்து மகாவம்சம் எழுதப்பட்டதன் நோக்கம் நன்கு தெளிவாகிறது.

இத்தகைய நோக்கங்கொண்ட மகாவம்சம் இலங்கைத்தீவில் நிலவிய ஏனைய ஆட்சிகளைப் பற்றியும் மன்னர்களைப் பற்றியும் எடுத்துக்கூறாதது

விக்யகத்தக்கதல்ல. ஆயினும், அனுராதபுரம் ஆட்சியுடனான தொடர்பு பற்றிக் கூறப்பட்ட சில செய்திகளிலிருந்து அனுராதபுரம் தவிர்ந்த வேறு பல அரசுகளும் இலங்கைத்தீவில் நிலவிய பேருண்மை பெறப்படுகிறது.

துட்டகைமுனு எல்லாளனுடன் போர்புரிவதற்கென மகாகம (திசமகாராம)விலிருந்து புறப்பட்டதிலிருந்து அனுராதபுரம் வரும்வரை, 32 தமிழ் மன்னர்களை வெற்றி கொண்டான் என்று மகாவம்சம் கூறுகின்றது. எல்லாளன் பேரரசன் அல்லன் என இகழ்ந்துரைக்கும் நோக்கோடு மகாவம்சம் இதைக் கூறியபோதிலும், அனுராதபுரத்துக்குத் தெற்கேயும் 32 தமிழரசுகள் நிலவியதை அது ஒப்புக்கொண்டுள்ளது. அதுமட்டுமன்றி, அனுராதபுரத்துக்கு வடக்கே நாகதீபம் எனும் தமிழரசு இருந்ததையும் பிறிதோர் இடத்திற் கூறியிருக்கிறது

வரலாற்றுக் காலத்திலிருந்து இலங்கைத்தீவிற் குடியேறியவர்களிலே தமிழ் மக்களே கூடுதலாக இருந்தனர். விஜயனும் அவனது 700 தோழர்களும் இலங்கைத்தீவுக்கு வந்ததாகக் கூறப்படும் கி. மு. 543 ஆம் ஆண்டுக்கு அடுத்த ஆண்டில் (கி. மு. 542 இல்) தமிழகத்தின் பாண்டிய நாட்டிலிருந்து பாண்டிய மன்னனின் தமிழ்ச்செய்திக் கடிதத்துடன் பாண்டிய இளவரசியும் 700 மணப்பெண்களும் கைத்தொழிற் கலைஞர்களும் பதினெண்குடிகளைச் சேர்ந்த ஆயிரம் குடும்பங்களுமெனப் பெருமெண்ணிக்கையிலான தமிழ்மக்கள் மாதோட்டத்தினூடாக வந்து குடியேறினரென மகாவம்சமே கூறுகிறது. எனவே விஜயனோடு இலங்கைக்கு வந்தவர்களைவிடப் பாண்டி நாட்டிலிருந்து வந்த தமிழர்களின் தொகை பலமடங்காகும் என்பதை அது உறுதிசெய்கிறது.

தமிழர் ஆட்சி (கி. மு 1ஆம் நூற்றாண்டு வரை)

கி. மு. 237 இல் சேனன், குத்திகன் ஆகிய தமிழ் மன்னர்கள் அனுராதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிபுரிந்த தேவநம்பியதீசனின் தம்பியான சூரத்தீசனைத் தோற்கடித்து 22 ஆண்டுகள் ஆட்சிபுரிந்தனர். இவர்கள் பௌத்தநெறியைப் பேணிக்காத்து நல்லாட்சி புரிந்தனர். இவர்களின் பின்னர் சூரத்தீசனின் தம்பி அசேலன் இவர்களைத் தோற்கடித்துப் பத்து ஆண்டுகள் ஆட்சிபுரிந்தான்.

அசேலனை கி. மு. 205 இல் வெற்றிகொண்ட எல்லாளன் 44 ஆண்டுகள் நீதி வழுவாத ஆட்சியைப் புரிந்தான். இவன் காலத்தில் அனுராதபுரத்துக்குத் தெற்கே 32 தமிழ்ச் சிற்றரசுகள் நிலவின. உருகுணை, கல்யாணி ஆகிய இடங்களில், சிங்களச் சிற்றரசுகளும் சமகாலத்திலிருந்தன. கி. மு. 161 இல் உருகுணை அரசனான துட்டகைமுனு சூழ்ச்சிப் போரில் எல்லாளனை வெற்றி கொண்டான்.

துட்டகைமுனுவின் 24 ஆண்டுகால ஆட்சியிலோ அதற்கு முன்போ அனுராதபுரத்துக்கு வடக்கே போர் தொடுத்தமைக்கான சான்றுகள் ஏதும் கிடைக்கப்பெறவில்லை. ஆயினும் வடக்கே பாலிவாவி (வவுனிக்குளம்) அருகிலிருந்து நான்கு மாணிக்கக் கற்களை வருவித்து, தான் கட்டிய மகா தூபத்திலே (ருவான்வெலிசாய விகாரையிலே) பதித்தான் என்ற செய்தியை மட்டும் மகாவம்சம் எடுத்துக்கூறுகிறது.

கி. மு. 103 இல், அனுராதபுரத்தை ஆண்ட துட்டகைமுனுவின் தம்பி மகன் வட்டகாமினி (வாலகம்பா) மீது எழுவர் தலைமையிலான தமிழர்

படையொன்று போர் தொடுத்தது. போரிலே தோல்வியுற்ற வட்டகாமினி தன்குடும்பத்தினருடன் ஊர்தியிலே (தேரிலே) ஏறித்தப்பியோடினான். பழு வைக்குறைத்து ஊர்தியை விரைவாகச் செலுத்துவதற்காகத் தனது இரண் டாவது மனைவி சோமாதேவியினை இடையில் இறக்கிவிட்டு முதன் மனைவி அனுலாவோடு தப்பிச்சென்றான். படையெடுத்த தமிழர் இருவர் தமது இருப்பிடம் திரும்பியபோது அவர்களில் ஒருவன் வட்டகாமினியாற் கைவிடப் பட்ட சோமாதேவியைத் தன்னுடன் அழைத்துச் சென்றான். இன்னொரு வன் புத்தரின் திருவோட்டை எடுத்துச்சென்றான். ஏனைய ஐவரான புலக தன், பாகியா, பனையமாறன், பிழையமாறன், தாதிகன் ஆகியோர் ஒரு வர் பின் ஒருவராக 14 ஆண்கள் 7 மாதங்களும் ஆட்சிசெய்தனர்.

கி. மு. 88 இல், மீண்டும் படையெடுத்துவந்த வட்டகாமினி தாதிகனை வெற்றிகொண்டான். முன்னர் தன்னாற் கைவிடப்பட்ட சோமாதேவியை வரவழைத்து அவளைப் பெருமைப்படுத்தும் நோக்கோடு சோமராமவிகாரை யைக் கட்டினான் என மகாவம்சம் கூறுகிறது.

கி. மு 45 இல், ஆட்சி நடத்திய தனசிவனுக்குப் பின் வடுகன் என்னும் பெயர்கொண்ட தமிழ்மன்னன் அனுலா என்பவளின் துணையோடு 14 மாதங்கள் ஆட்சிபுரிந்தான். ஏற்கனவே தனது கணவனையும் காதலனை யும் நஞ்சூட்டிக் கொன்ற அனுலா வடுகனையும் அவ்வாறே கொன்றுவிட்டு வேறொருவனை அரசனாக்கினாள். அதன்பின் கி. மு. 43 இல், நிமிலன் என் னும் தமிழன் அதே அனுலாவின் துணையோடு 6 மாதங்கள் ஆட்சிபுரிந் தான்.

விஜயன் காலத்துக்கும் பலநூற்றாண்டுகள் முன் (தமிழர் மரபினரான) நாகர், இயக்கர்களின் ஆட்சி இலங்கையில் நிலவியதாக மகாவம்சம் எடுத் துக்கூறுகிறது.

கிருத்துவுக்கு முந்திய இரு நூற்றாண்டுக் காலப்பகுதியில் (கி.மு.237-44) 193 ஆண்டுகளில் 88 ஆண்டுகளுக்குமேல் தமிழ் மன்னர்கள் அனுராத புரத்தைத் தலைநகராகக் கொண்டு ஆட்சிசெய்தனர். இலங்கையின் அனு ராதபுரம் தவிர வேறுபல பகுதிகளிலும் வேறுபல காலங்களில் தமிழர்கள் ஆட்சிபுரிந்த வரலாற்றினையும் மகாவம்சத்தினூடாக அறியமுடிகிறது. பௌத்த சிங்கள மன்னர்களின் ஆட்சிகளை மட்டும் புகழ்ந்துரைத்த மகா வம்சம் என்னும் நூலே தவிர்க்கமுடியாமல் பல தமிழ் மன்னர்களின் ஆட் சிக்காலங்களை வெளிப்படுத்திவிட்டது.

மகாவம்சத்தினால் இருட்டடிப்புச் செய்யப்பட்ட இலங்கையின் ஏனைய பகுதிகளில் நிலவிய பண்டைய தமிழ் அரசுகளையும் அரசர்களையும் பற்றிப் புதைந்து கிடக்கும் வரலாற்றினைப் பல்வேறு ஆய்வுகளினூடாக வெளிக் கொண்டுவர நாம் முயற்சிக்கவேண்டும்.

தமிழராட்சி (கி. பி. 1 - 7 ஆம் நூற்றாண்டு வரை)

கி. பி 1 ஆம் நூற்றாண்டிலிருந்து 5 ஆம் நூற்றாண்டுக்குள் அனுராத புரத்தில் 5 தமிழ் மன்னர்கள்தான் ஆட்சி புரிந்தனர். ஆயினும் பல சிங்கள மன்னர்கள் தமிழ் மக்களினதும் படைகளினதும் துணையோடுதான் ஆட்சி நடத்தவேண்டிய கட்டாய நிலை இருந்துவந்தது. கி. பி. 500 வரையில் மாதோட்டப் பகுதி தனியான மன்னராட்சியின் கீழ் இருந்தது என்ற

*H. W.* கொடிறின்றன் இலங்கையின் சுருக்க வரலாறு என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார்.

கி.பி. 113-135ஆம் ஆண்டுகளுக்கிடையில் அனுராதபுரத்தில் ஆட்சிபுரிந்த 1 ஆம் கஜபாகு மன்னனின் தந்தையின் ஆட்சிக் காலத்தில் தமிழகத்தில் காவேரிக்குக் கல்லணை கட்டுவதற்காக இலங்கையிலிருந்து 12000 சிங்களவர்களைக் கரிகாற்சோழன் பிடித்துச்சென்றான். கஜபாகுமன்னன் அவர்களை மீட்டுவந்ததோடு 12000 தமிழர்களையும், சோழநாட்டிலிருந்து அழைத்து வந்து இலங்கையிலே குடியமர்த்தியதாக ''பூஜாவலி'' என்னும் நூல் குறிப்பிடுகின்றது. எனவே கி. பி. 113 - 135 ஆம் ஆண்டுகளுக்கிடையிலே 12000 தமிழர்கள் தமிழகத்திலிருந்து வந்து குடியேறினர் என்பது உறுதியாகின்றது. இக்கஜபாகு மன்னனே சேரன் செங்குட்டுவன் தமிழகத்திலே கண்ணகிக்கு விழா எடுத்தபோது அதிலே கலந்துகொண்டான் என்பது மட்டுமன்றி, இலங்கையிலும் கண்ணகி வழிபாட்டை அறிமுகப்படுத்தினான் என்பது குறிப்பிடத்தக்கது. 22 ஆண்டுகள் நல்லாட்சி புரிந்த கஜபாகு மன்னன் மகாயான பௌத்தத்தைக் கடைப்பிடித்ததால் தேரவாத பௌத்தநெறி சார்ந்த மகாவம்சம் இவனது வரலாற்றுச் சிறப்பினை மறைத்துவிட்டது

கி. பி. 237 இல் அபய நாகன் என்பவன் நகரிலிருந்த தமிழர்களை அணிதிரட்டி அவர்களின் உதவியுடன் தன் அண்ணனான தீசனை விரட்டி விட்டு அனுராதபுர ஆட்சியைக் கைப்பற்றி 8 ஆண்டுகள் அரியணையிலிருந்தான். தமிழர்கள் இங்கு செறிவாக வாழ்ந்ததற்கு இது சான்றாகின்றது. அதுமட்டுமன்றிப் போரிடும் ஆற்றல் தமிழர்க்கு நிறையவே இருந்ததையும் அறியமுடிகிறது. அடுத்த இரு நூற்றாண்டுகளும் தமிழக ஆட்சியிலும் இருள் சூழ்ந்த காலம். இலங்கையிலும் அக்காலத்தில் அரசியற் செல்வாக்குக் குறைந்திருந்தது. கி பி 436 இல் பாண்டுபாரிந்தன், குட்டபாரிந்தன், கிரிதரன், தாடிகன், பீடிகன் எனும் தமிழர்கள் பெரும் படையெடுத்து வந்து அனுராதபுரத்தைக் கைப்பற்றினர் ஒருவர்பின் ஒருவராக இவர்கள் 27 ஆண்டுகள் சிறப்புற ஆட்சி நடத்தினர். இவர்களில் பாரிந்தன் தாடிகன் ஆகிய இருவரது ஆட்சி உருகுணை வரை பரந்திருந்தது பற்றியும் அவர்கள் பௌத்த விகாரைகளை அமைத்துப் பௌத்தநெறி வளர்ச்சிக்குப் பெரிதும் உதவியது பற்றியும் கல்வெட்டுச் சான்றுகள் உறுதிசெய்கின்றன.

கி. பி. 463 இல் மோரிய மரபைச் சேர்ந்த தாதுசேனன் பீடிகனை வெற்றிகொண்டு ஆட்சி பீடமேறினான். தாதுசேனன் தனக்குப்பின் தனதாட்சியை ஆட்சிமரபின்படி தன் பட்டத்தரசியின் மகன் மொகல்லானனுக்குக் கொடுத்துவிடுவானென இளைய மனைவியின் மகனான காசியப்பன் அஞ்சினான். அதனால் அவன் தன் தந்தையாகிய தாதுசேனனை உயிரோடு குளக்கட்டில் வைத்துக் கட்டிக்கொன்றான். ஆட்சிக்குரிய மொகல்லானன் காசியப்பனுக்கு அஞ்சித் தமிழகத்துக்கு ஓடினான். தப்பிச்சென்ற தம்பி தமிழகத்திலிருந்து தமிழர் படையுடன் வந்து தாக்கக்கூடுமென அஞ்சி அனுராதபுரத்திலிருந்து சிகிரியாவுக்குத் தன் ஆட்சிமையத்தை மாற்றினான். சிகிரியாவின் மலைக்குகையில் உலகப் புகழ்பெற்ற ஓவியங்களைத் தீட்டுவித்த காசியப்பனை, கி. பி. 497 இல் தமிழகத்திலிருந்து படைதிரட்டி வந்த மொகல்லானன் கொன்று ஆட்சிமையத்தை மீண்டும் அனுராதபுரத்துக்கு மாற்றினான்.




01. ஜம்புகோளம்
(காங்கேசன்துறை)

02. கதிரமலை
(கந்தரோடை)

03. நல்லூர்

04. பூநகரி

05 மாந்தை

06. அனுராதபுரம்

07. புத்தளம்

08 கல்யாணி
(களனி)

09 மகாகமம்
(திசமகாராம)

10. கதிர்காமம்

11. தீகவாபி

12. கொட்டியாரம்

தமிழ்ச் சேனைகளின் உதவியைப் பெறுபவர்கள் மட்டுமே இலங்கைத் தீவின் ஆட்சியைக் கைப்பற்ற முடியும், ஆட்சி செய்ய முடியும் என்ற நிலை கி. பி. 623 - 691 வரை நிலவியது.

கி. பி. 623 இல், 3 ஆம் அக்கிரபோதி அரசனானதும் சேட்டதீசன் தடா சிவனுடன் தமிழகம் சென்று சில ஆண்டுகளின் பின் அங்கிருந்து படை திரட்டி வந்து அக்கிரபோதியைத் தோற்கடித்தான். தோற்றுப்போன அக் கிரபோதி தமிழகத்துக்குத் தப்பியோடிச் சென்று படைதிரட்டினர்ன். தமி

ழர் படையுடன் வந்து ஆட்சியை மீண்டும் பிடித்த அக்கிரபோதியைத் தமிழகத்திலிருந்து படை திரட்டிவந்த தாடோபதீசன் விரட்டியடித்துவிட்டு அரியணையேறினான். ஆயினும் அக்கிரபோதியின் மகன் 2ஆம் காசியப்பன் தாடோபதீசனைத் தோற்கடித்து ஆட்சியைப் பிடித்தான். தாடோபதீசன் மீண்டும் தமிழகத்துக்குத் தப்பியோடினான்.

2 ஆம் காசியப்பன் அனுராதபுர அரசியலிலே இருந்துவந்த தமிழர் செல்வாக்கைக் குறைக்கும் நோக்குடன், கி. பி. 661 இல் உருகுணையில் ஆட்சிபுரிந்த 1 ஆம் தப்புலனை அழைத்துவந்து அரசனாக்கினான். ஆயினும் இலங்கை அரசியலில் ஓங்கிவளர்ந்த தமிழர் செல்வாக்கைத் தப்புலனாலே தடுத்துநிறுத்த முடியவில்லை.

தாடோர்பதீசனின் மருமகன் ஹத்தகாடன் தமிழகம் சென்று பெரும் படை திரட்டி வந்தான். இலங்கைத் தீவிலிருந்த தமிழர்களினது உதவியையும் பெற்று 1ஆம் தப்புலனைத் தோற்கடித்து, 2ஆம் தாடோபதீசன் என்ற பெயருடன் கி. பி 664 இல், அரியணையேறினான். அவனுக்குப்பின் அவன் தம்பி 4ஆம் அக்கிரபோதி ஆட்சிபீடமேறினான்.

மானவர்மன் என்பான் பல்லவர் துணையுடன் கி. பி. 691 இல், 4 ஆம் அக்கிரபோதியைத் தோற்கடித்து ஆட்சியைக் கைப்பற்றினான். அக்கிரபோதியின் 27 ஆண்டு ஆட்சிக்காலம் முழுவதும் அனுராதபுர ஆட்சியின் படைத்தலைவர்களாகவும் அமைச்சர்களாகவும் பெரும்பாலும் இருந்தவர்கள் தமிழர்கள் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

பயிற்சி:

01. விஜயன் வருவதற்குப் பலநூற்றாண்டுகளுக்கு முன்பே இலங்கையில் நிலவிய தனியரசுகளாக மகாவம்சம் குறிப்பிடும் அரசுகள் எவை?

02. துட்டகைமுனு காலத்தில் அனுராதபுரத்துக்குத் தெற்கே இருந்த தமிழரசுகள் எத்தனை?

03. தேவநம்பியதீசன் தம்பி சூத்ரதீசனைத் தோற்கடித்து ஆட்சிசெய்த தமிழ் மன்னர்கள் யாவர்?

04. தமிழ் மன்னர்களின் தாக்குதலுக்கு ஈடுகொடுக்கமுடியாது தனது மனைவி சோமாதேவியைக் கைவிட்டு ஓடிய சிங்கள மன்னன் யார்?

05 காவிரியாற்றுக்குக் கல்லணை கட்ட இலங்கையிலிருந்து 12000 சிங்களவர்களைப் பிடித்துச் சென்ற சோழமன்னன் யார்?

06 கி. பி. 7 ஆம் நூற்றாண்டில் இலங்கையிலிருந்தும் தமிழகத்திலிருந்தும் படையுதவி பெற்று ஆட்சியைக் கைப்பற்றிய சிங்கள மன்னர்கள் நால்வரின் பெயர்களைத் தருக?

07. தமிழர்களின் உதவியுடன் மட்டுமே இலங்கையில் ஆட்சியைப் பிடிக்கவோ, ஆட்சியில் நிலைக்கவோ முடியும் என்ற நிலை 7 ஆம் நூற்றாண்டில் எந்தக்காலத்தில் நிலவியது?

## இயல் 4

# இலங்கைத்தீவிலே தமிழராட்சியும் மாட்சியும் - 2

(கி. பி. 8 - 12 ஆம் நூற்றாண்டு)

கி. பி. 7 ஆம் நூற்றாண்டு முழுவதிலும், இலங்கைத்தீவின் அனுராத புரத்தில் ஆட்சி புரிந்த மன்னர்களின் ஆட்சி நிலைத்திருக்க வேண்டுமாயின் இலங்கைத்தீவிலும் தமிழகத்திலும் இருந்த தமிழர் சேனைகளின் உதவி தேவைப்பட்டமை தவிர்க்கமுடியாததாயிற்று. தமிழர்களே இலங்கைத்தீவின் அனுராதபுர அரியணையைத் தீர்மானித்த காலமாக இக்காலம் இருந்தது. இந்நிலை தொடர்ந்தும் நீடிக்கவே செய்தது. 7, 8, 9 ஆம் நூற்றாண்டுகளில் தமிழகத்தைப் போன்றே வடஇலங்கையிலும் சைவநெறி தழைத்தோங்கி வளர்ந்தது. இக்காலத்திலே திருகோணமலையிலும் மன்னாரிலும் இருந்த திருக்கோணேஸ்வரமும், திருக்கேதீஸ்வரமும் சிறந்தோங்கியிருந்தமை பற்றி நாயன்மார்களின் தேவாரப் பதிகங்களினால் அறியமுடிகிறது.

கி. பி. 781 இல், ஆட்சிக்கு வந்த 7 ஆம் அக்கிரபோதி வடபகுதியில் இருந்த தமிழர்களுக்கு அஞ்சி, தன் தலைநகரை அனுராதபுரத்திலிருந்து பொலநறுவைக்கு மாற்றினான். முதலிலே பொலநறுவைக்குத் தலைநகரை மாற்றியவன் இவனே. இக்காலகட்டத்திற் சில சிங்கள அரசர்கள் சேரநாட்டுடன் திருமணத்தொடர்பு கொண்டிருந்தனர். அதுமட்டுமன்றி நடைபெற்ற பல போர்களிற் சேரர் படைகளின் உதவிகளும் பலராற் பெறப்பட்டன.

1 ஆம் சேனன் ஆட்சிக்காலமாகிய கி. பி. 846 - 866 ஆம் ஆண்டு காலப் பகுதியில் பாண்டியமன்னன் சிறீமாற சிறீவல்லபன் இலங்கைமீது படையெடுத்தான். இலங்கையின் பல பகுதிகளிலும் இருந்த தமிழர் படைகள் பாண்டியன் படையுடன் இணைந்து அவனது வெற்றிக்கு உதவின. அனுராதபுரத்தில் நடைபெற்ற கடுஞ்சமரில் சிங்கள இளவரசன் மகிந்தன் கொல்லப்பட்டான். தலைநகருக்கு அருகிலே நடைபெற்ற போரிலே மற்றுமோர் இளவரசன் காசியப்பன் எதிர்நிற்கமுடியாது பின்வாங்கி ஓடினான். அனுராதபுரத்திலிருந்து உருகுணைவரை பாண்டிய மன்னன் கைகளில் வீழ்ந்தது. 1 ஆம் சேனன் அரச செல்வங்களுடன் மலையகத்துக்குத் தப்பியோடினான். அங்கு தொடர்ந்து சென்ற பாண்டியனின் தூதுவர்களுக்கு வேண்டிய வெகுமதிகளை வழங்கிய 1 ஆம் சேனன், பாண்டியனுடன் அமைதிப் பொருத்தனைச் (சமாதான ஒப்பந்தத்தினை) 'செய்தே தனது ஆட்சியைத் திரும்பப்பெற்றுக் கொண்டான். இவனே மாணிக்கவாசகராற் சைவநெறிக்கு மாற்றப்பட்ட சிங்களமன்னன் என்று கூறப்படுகிறது. இவன் சைவநெறிக்கு மாற்றப்பட்டதாக நிகாய சங்கிராஹவ என்ற சிங்கள நூல் குறிப்பிடுகிறது.

கி. பி. 915 இல், பராந்தகசோழன் பாண்டிய நாட்டின்மீது போர் தொடுத்தபோது அனுராதபுர மன்னன் 5 ஆம் காசியப்பன் பாண்டியன் இராஜசிம்மனுக்கு உதவியாகத் தன்படையை அனுப்பினான். வெள்ளூரில் நடைபெற்ற கடும்போரிற் பாண்டியப்படையும் உதவிக்குச் சென்ற சிங்களப் படையும் படுதோல்வியடைந்து பெரும் இழப்புக்களுடன் புறமுதுகிட்டது.

எஞ்சிய சிங்களப்படை தலைவனில்லாது நாடு திரும்பியது. பாண்டியர் தலைநகரையும் சோழனிடம் பறிகொடுத்த இராஜசிம்மன் அனுராதபுரத்துக்கு அடைக்கலம் தேடி ஓடிவந்தான். ஆயினும் சோழனுக்கு அஞ்சிய சிங்கள மன்னன் 4 ஆம் தப்புலன் இராஜசிம்மனுக்கு அடைக்கலம் கொடுக்க மறுத்தான். இதனாலே தான்கொண்டுவந்த பாண்டிய அரச முடியையும் செல்வங்களையும் அணிகலன்களையும் 4 ஆம் தப்புலனிடம் கொடுத்துவிட்டுச் சேரநாட்டுக்குத் திரும்பிச் சென்றான்.

பாண்டியமன்னன் இராஜசிம்மன் தப்புலனிடம் விட்டுச்சென்ற முடியையும் செல்வங்களையும் தன்னிடம் ஒப்படைக்குமாறு பராந்தகசோழன் அனுராதபுரத்துக்குத் தூதுவர்களை அனுப்பினான். அப்போது ஆட்சியிலிருந்த உதயன் மறுக்கவே சோழப்படைகள் இலங்கைமீது படையெடுத்தன. சோழராலே தோற்கடிக்கப்பட்ட உதயன் பாண்டிய முடியுடன் அணிகலன்களையும் எடுத்துக்கொண்டு உருகுணைக்கு ஓடினான்.

சோழநாட்டின் வடக்கே இராஷ்டிரகூட மன்னன் கிருஷ்ணனுடன் பெரும் போரில் ஈடுபட்டிருந்ததால், சோழர்படை தொடர்ந்து இலங்கையிலே போரிலீடுபடாது நாடு திரும்பியது. 4 ஆம் மகிந்தன் ஆட்சிக்காலத்தில் சோழர்படை மீண்டும் இலங்கைமீது போர் தொடுத்தது.

கி. பி 991 இல், ஆட்சிப் பொறுப்பேற்ற 5 ஆம் சேனன் தனது படைத் தலைவனின் உடன் பிறந்தானைக் கொன்றதாற் சினங்கொண்ட படைத் தலைவன், தலைநகரிலிருந்த தமிழர் சேனைகளின் உதவியுடன் சிங்கள மன்னனுக்கு எதிராகக் கிளர்ச்சியிலிறங்கினான். கி. பி. 992 இல், நடைபெற்ற இக்கிளர்ச்சியில் சிங்கள மன்னன் உருகுணைக்கு விரட்டப்பட்டான். படைத்தலைவனுடன் அமைதி உடன்பாடு செய்துகொண்ட 5 ஆம் சேனன் அவனது கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொண்டே பொலநறுவைக்குத் திரும்பினான்.

பல நூற்றாண்டுகளாகத் தலைநகராக விளங்கிய அனுராதபுரத்திலே தமிழர்கள் தொகை பெருகியது. படைகளிலிருந்த தமிழர்களும் கன்னடரும் தமது உரிமைகளுக்காக அடிக்கடி கிளர்ச்சியில் ஈடுபட்டனர். இதனால் ஆட்சியை நடத்தமுடியாத 5 ஆம் மகிந்தன் உருகுணைக்கு ஓடித்தப்பினான்.

சிங்கள மன்னர்கள் வலுவற்றிருந்தபோதிலும், பாண்டியர்களுக்கு அடிக்கடி படையுதவி புரிந்ததாலும், பாண்டியரின் முடியை வைத்திருந்ததாலும் சோழர்கள் இலங்கைமீது படையெடுக்க வேண்டிய கட்டாயநிலை ஏற்பட்டது. 10 ஆம் நூற்றாண்டிலே சிங்கள அரசர்கள் கடைப்பிடித்த வெளிநாட்டுக் கொள்கையும் சோழர்களைப் போருக்கு வலிந்திழுப்பதாகவே அமைந்தது.

கி. பி. 992 இல், இராஜராஜன் படையெடுத்து உருகுணை மலையகம் தவிர்ந்த இலங்கையின் ஏனைய பகுதிகளைக் கைப்பற்றினான். இவன் காலத்திற் சோழப் பேரரசின் ஒரு மாநிலமாகவே மும்முடிச் சோழமண்டலம் என்ற பெயரில் இலங்கையின் வடபகுதி திகழ்ந்தது. பொலநறுவை சனநாதமங்களம் என்ற பெயரில் சோழரது இலங்கையின் தலைநகராயிற்று.

கி. பி. 1017 இல், பாண்டிய முடியையும் அணிகலன்களையும் கைப்பற்றுவதற்காக இராஜேந்திரசோழன் தொடுத்த போரில் இலங்கையின்

அனைத்துப் பகுதிகளும் கைப்பற்றப்பட்டன. இராஜேந்திரசோழன் பாண்டிய முடியையும் அணிகலன்களையும் கைப்பற்றியதுடன் 5 ஆம் மகிந்தமன்னனை யும் சிறைப்பிடித்துச் சென்றான்.

சிங்கள வரலாற்றேடுகள் சோழரைப் பௌத்தநெறியின் பகைவர்களா கக் காட்டி, சோழர்களால் விகாரைகள் இடிக்கப்பட்டதாகவும் எரியூட்டப் பட்டதாகவும் கொள்ளையிடப்பட்டதாகவும் பொய்யுரை பகன்றன. உண் மையிற் சோழப் பேரரசின் தமிழகத்திலே கூடப் பௌத்தநெறி மதித்துப் போற்றப்பட்டது என்பதை நோக்கின், சிங்கள ஏடுகளின் கூற்று வீண் பழி யுரை என்பதைப் புரிந்துகொள்ளலாம்.

இராஜராஜ சோழன் தான் ஒரு சைவனாக இருந்தபோதிலும் சைலேந் திர மன்னனை அழைப்பித்து, நாகபட்டினத்திலே சூடாமணி விகாரையை அமைப்பித்தான். காஞ்சி யிலிருந்த பௌத்தப் பெரும் பள்ளியையும் பெருஞ்செலவிலே புனர மைத்துக் கொடுத்தான். இலங்கையின் திருகோண மலையில் உள்ள வெல்கம் விகாரையைத் திருத்தி யமைத்து, இராஜராஜப் பெரும் பள்ளி என அதற் குப் பெயர் சூட்டினான். இவைமட்டுமன்றி, இலங் கையின் கடைசிச் சோழ மன்னன் குலோத்துங்கன் கூட, தமிழகத்திற் பௌத்த விகாரைகளுக்குப் பேருதவி கள் புரிந்து விகாரைகளைப் பேணப் பல நிலங்களை வழங்கினான் எனக் கல் வெட்டுக்கள் கூறுகின்றன. எனவே சோழ மன்னர்கள் பௌத்தத்தின் எதிரிகள், பௌத்தத்தைச் சிதைத்த வர்கள் என்று கூறுவதில் உண்மை இல்லை என்பதும் சிங்கள மக்களிடையே இறைநெறி (மத) உணர் வைத் தூண்டிச் சோழர் களுக்கு எதிராகக் கிளர்ந் தெழ வைப்பதற்கு மேற் கொண்ட சூழ்ச்சிப் பரப் புரையே அவை என்பதும் நன்கு புலப்படுகின்றது.



இலங்கையிலே சோழராட்சி கி. பி. 992 ஆம் ஆண்டிலிருந்து கி. பி. 1073 வரை நீடித்தது. 82 ஆண்டுகளுக்கு மேலாக முதலாம் இராஜராஜ சோழன், இராஜேந்திர சோழன். இராஜாதிராஜன், 2 ஆம் இராஜேந்திரன், வீரராஜேந்திரன், அதிராஜேந்திரன், குலோத்துங்கன் என 7 சோழ மன்னர்களின் ஆட்சியின்கீழ் இலங்கை இருந்தது.

கி. பி. 1073 இல், 1ஆம் விஜயபாகு அனுராதபுரத்தையும் பொலநறுவையையும் கைப்பற்றினானாயினும், தொடர்ந்து நடந்த தமிழர் கிளர்ச்சிகளை அடக்கி கி. பி. 1076 ஆம் ஆண்டிலேதான் அவனால் மன்னனாக முடிசூடிக் கொள்ளமுடிந்தது.

சோழரின் ஆட்சிக்குப்பின் அரியணையேறிய 1 ஆம் விஜயபாகு தன் தங்கை மித்திராவைப் பாண்டிய இளவரசன் பாண்டுராஜாவுக்கு மணமுடித்து வைத்தான். கி. பி. 1082 இல் விஜயபாகு சோழருடன் போரிடமுயன்ற போது அவன் படையிலிருந்த தமிழர்கள் சோழருடன் போரிட மறுத்து, பெருங்கிளர்ச்சியிலிறங்கி அரண்மனையையும் தீக்கிரையாக்கினர். கிளர்ச்சிக்கஞ்சி அரண்மனையை விட்டுத் தப்பியோடிய 1 ஆம் விஜயபாகு திரும்பி வந்து கிளர்ச்சியைத் தணித்து வேளைக்காரப் படையைச் சேர்ந்த தமிழ்ப் போர் வீரர்களிடமே புத்தரின் திருப்பல்லை (பௌத்ததந்த தாதுவை)க் காக்கும் பெரும் பொறுப்பை ஒப்படைத்தான். பின் சோழரின் நட்பைப் பெறும் வகையில், தனது தங்கையின் மகனான மானாபரணனுக்கு (பாண்டிய இளவரசன் பாண்டுராஜன் மகன்) 1 ஆம் குலோத்துங்க சோழனின் மகளைத் திருமணஞ்செய்து வைத்தான். இந்த மானாபரணனே (வீரபாகு) 1 ஆம் பராக்கிரமபாகுவின் தந்தையாவான்.

1 ஆம் விஜயபாகுவுக்குப் பின்னர் இலங்கை அரசர்களிடையே அரசியற் பிணக்குகளும் குடும்பச் சிக்கல்களும் ஏற்பட்டன. இதனாலே பொலநறுவையும் அதற்குத் தெற்கே உள்ள பகுதிகளும் 4 பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டு ஆட்சிகள் பங்கிடப்பட்டன. இவற்றில் ஒரு பகுதிப் பொறுப்பை 1 ஆம் பராக்கிரமபாகு ஏற்று நடத்தினான். பின்னர் இவனது படைத் தலைவனாக இருந்த ரக்கன் என்னும் தமிழனின் துணையுடன் உருகுணையையும் ஏனைய பகுதிகளையும் வெற்றிகொண்டு கி. பி. 1153 இல் பேரரசனானான் பராக்கிரமபாகுவின் படையில் பெருமளவில் தமிழருடன் கேரளரும் இருந்தனர். இவன் காலத்திலே பெருமளவு ஏரிகளும் குளங்களும் அமைக்கப்பட்டன. தூர்ந்த குளங்கள் செப்பனிடப்பட்டன.

பர்மாவரை படை நடத்தி வெற்றி கண்ட 1 ஆம் பராக்கிரமபாகு தமிழகத்திற் சோழருக்கும் பாண்டியர்களுக்குமிடையில் ஏற்பட்ட பிணக்குகளிலும் குடும்பச் சண்டைகளிலும் தலையிட்டான். சோழர்களுக்கெதிராகப் பாண்டியரில் ஒரு பகுதியினர் நடத்திய போரில் பாண்டியர்களுக்கு உதவத் தனது படைகளைத் தமிழகத்துக்கு அனுப்பிவைத்தான். அப்போரில் அவனது படை படுதோல்வியடைந்து, படைத்தளபதி இலங்காபுரன் கொல்லப்பட்டு அவனது தலை பாண்டிய அரண்மனைத் தோரண வாயிலிலே தொங்கவிடப்பட்டது. அதனோடு நில்லாது 1 ஆம் பராக்கிரமபாகு தொடர்ந்தும் சோழருக்கு எதிராகப் பாண்டியருக்கு உதவப்படைகளை அணிதிரட்டத் தொடங்கினான். அதே வேளையிற் சோழரின் பெருந்தாக்குதற்குள்ளாகிய பராக்கிரமபாகுவின் படை சிதறடிக்கப்பட்டது.

பராக்கிரமபாகு தன் ஆட்சித் தொடக்கத்தில் நாட்டுக்குப் பெரும் புகழ் சேர்த்தானாயினும் இறுதிக் காலத்தில் அவன் மேற்கொண்ட நடவடிக்கைகள் அவனுக்குப் பெரும் தோல்வியில் முடிந்ததுடன், நாட்டையும் பெரும் பொருண்மிய (பொருளாதார) நெருக்கடிகளுக்குள்ளாக்கியது.

கி. பி. 1186 வரை 33 ஆண்டுகள் ஆட்சியிலிருந்த 1 ஆம் பராக்கிரமபாகு பாண்டிய இளவரசன் பாண்டுராஜா என்பவனின் பேரனாவான். அவன் தமிழ்ப் படைத்தளபதிகளின் ஒத்துழைப்போடு ஆட்சி புரிந்து வெற்றிகள் பல பெற்றான். தமிழ்க் குருதி உறவுடையவனாக இருந்தபோதிலும், அவனது சிற்றன்னை (தந்தையின் இரண்டாவது மனைவி) ஒரு தமிழ் இளவரசியாக இருந்தபோதிலும், சிங்களவர்களின் பெருந்தலைவனாக, சூளவம்சத்தின் பாட்டுடைத்தலைவனாக, இலங்கை முழுவதையும் கட்டியாண்ட கடைசிச் சிங்கள மன்னனாகச் சிங்கள மக்களாற் போற்றப்பட்டு வருகின்றான்.

கி. பி. 1186 இல் 1 ஆம் பராக்கிரமபாகுவின் மறைவுக்குப்பின்னர் நாட்டில் நிலையற்ற ஆட்சியே நிலவியது. 26 ஆண்டுகளில் 15 இற்கும் மேற்பட்ட தமிழ் சிங்கள அரசர்களின் ஆட்சிகளை நாடு கண்டது. அவர்களிற் கடைசியாக ஆட்சி நடத்தியவன் விக்கிரமபாண்டியன் என்னும் தமிழ் நாட்டு இளவரசன்.

கி. பி. 7 ஆம் நூற்றாண்டிலிருந்து 12 ஆம் நூற்றாண்டு வரையிலுமான ஆட்சிக் காலத்தில், பெரும்பாலும் தமிழகத்தின் பாண்டிய, சோழ மன்னர்களின் மேலாளுகையின் கீழேயே இலங்கைத்தீவு இருந்தது.

1 ஆம் பராக்கிரமபாகுவுக்குப் பின் சிங்களப் பகுதிகள் கூட ஒரு ஆட்சியின் கீழ் இருக்கவில்லை. நிலையற்ற குறுகிய இடைவெளிக்குப்பின் வடபகுதியிலே தனியான யாழ்ப்பாணத் தமிழரசும் வன்னியிலும் கிழக்கிலும் யாழ்ப்பாண அரசின் மேலாளுகையை ஏற்ற குறுநில அரசுகளும் வன்னிமைகளும் மலையகத்தில் தனியரசும் தமிழரின் தாக்குதலுக்கு அஞ்சித் தெற்கு நோக்கி நகர்ந்து சென்ற கரையோரச் சிங்கள அரசும் தனித்தனி அரசுகளாக நிலவின. போர்த்துகேயர் வரும்வரை பொதுவாக இந்தநிலையே இலங்கைத் தீவில் நீடித்தது.

பயிற்சி:

01. தமிழருக்கு அஞ்சித் தன் தலைநகரை அனுராதபுரத்திலிருந்து பொலநறுவைக்கு முதன்முதல் மாற்றிய சிங்கள மன்னன் யார்?

02. கி. பி. 846 இன் பின் 1 ஆம் சேனனின் ஆட்சிக்காலத்தில் இலங்கைமீது படையெடுத்த பாண்டிய மன்னன் யார்? அவனாற் கொல்லப்பட்ட சிங்கள இளவரசன் யார்?

03. வெள்ளூர்ப் போரிலே பராந்தக சோழனாலே தோற்கடிக்கப்பட்ட மன்னன் யார்? அவனுக்குப் படையுதவி கொடுத்த சிங்கள மன்னன் பெயர் என்ன?

04. இலங்கை முழுவதையும் தன் ஆட்சிக்குள் உட்படுத்திப் பாண்டிய முடியையும் மீட்ட சோழ மன்னன் யார்?

05. சோழ மன்னர்கள் இலங்கை மீது படையெடுத்ததற்கான சூழ்நிலை பற்றிக் கூறுக?

06. 80 ஆண்டுகளுக்கு மேல், தொடர்ச்சியாக இலங்கையை ஆண்ட சோழ மன்னர்களின் பெயர்களைத் தருக?

07. 1 ஆம் விஜயபாகு சோழ நாட்டின்மீது படையெடுக்க முற்பட்டபோது சோழருக்கு எதிராகப் போரிடமாட்டோம் என்று தமிழர் மேற் கொண்ட கிளர்ச்சி எந்த ஆண்டில் நடைபெற்றது?

08. 1ஆம் இராஜராஜசோழன் அமைத்த, மீள (புனர) மைத்த பௌத்த விகாரைகள் எவை?

09. 1 ஆம் பராக்கிரமபாகுவுக்கும் பாண்டியர்களுக்குமுள்ள உறவுமுறை பற்றி விளக்குக?

10. சோழர்களுக்கு எதிராக, பாண்டியர்களில் ஒரு பிரிவினர்களுக்கு உதவியாகப் போரிட என 1 ஆம் பராக்கிரமபாகு அனுப்பிய படையின் தலைவன் யார்?

## இயல் 5
# யாழ்ப்பாணத் தமிழரசு

ஐரோப்பியர் இலங்கைத்தீவிலே காலடி எடுத்துவைப்பதற்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே, யாழ்ப்பாணத் தமிழரசு இலங்கைத்தீவின் வலுவுள்ள அரசாக, புகழ்பூத்த அரசாகத் திகழ்ந்துவந்துள்ளது.

ஐரோப்பியர் முதன்முதலிற் காலடி எடுத்து வைத்தபோது இலங்கைத் தீவில் மூன்று அரசுகள் இருந்தன. அவை யாழ்ப்பாணத் தமிழரசு, கோட்டைச் சிங்கள அரசு, கண்டிச் சிங்கள அரசு என்பனவாகும். இவற்றிலே யாழ்ப்பாணத் தமிழரசே காலத்தினால் முந்தியதும் வலுவுள்ளதுமாக விருந்தது.

யாழ்ப்பாணத் தமிழரசு கி. பி. 13 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதிகளிலேயே சிறப்புடனும் செழிப்புடனுந் திகழ்ந்தது. யாழ்ப்பாண அரசின் வலிமைக்கு அஞ்சிய சிங்கள அரசுகள் 13, 14 ஆம் நூற்றாண்டுகளிற் பொலநறுவையிலிருந்து தம்பதெனியா, யாப்பகூவ, குருணாகல், கம்பளை எனத் தெற்கு நோக்கி இடம்பெயர்ந்தன. 15 ஆம் நூற்றாண்டில் இரண்டாயின. கோட்டையரசு 15 ஆம் நூற்றாண்டின் முற்பகுதியிலும் கண்டியரசு 15 ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியிலும் உருவான அரசுகளாகும். 14 ஆம், 15 ஆம் நூற்றாண்டுகளிற் சிங்கள அரசுகள் யாழ்ப்பாணத் தமிழரசுக்குக் கீழ்ப்படிந்து திறை செலுத்தி வந்தன.

வெளிநாட்டு நாடோடியான இபன் பற்றுற்றாவின் குறிப்புக்களிலிருந்து அக்காலத்தில் இலங்கைத்தீவின் தென்மேற்பகுதியின் விளைபொருட்களை வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்துவந்தது யாழ்ப்பாண அரசே என்பது தெரியவருகிறது.

காடுகளில் யானை பிடிப்பவர்களிடமிருந்து திறையாகப் பெற்ற யானைகளிற் பலவற்றை யாழ்ப்பாணத் தமிழரசர் தமிழகத்திலிருந்த அரசுகளுக்கு அன்பளிப்பாக வழங்கினர் என்பதும் தமிழக வரலாற்றுக் குறிப்புக்களிலிருந்து அறியவருகிறது. மன்னார்க் கடலில் முத்துக்குளிக்கும் முழு உரிமையையும் பெற்றிருந்த யாழ்ப்பாண அரசு, முத்து வணிகத்தினாற் பெருஞ் செல்வத்தை ஈட்டி வந்ததும் குறிப்பிடத்தக்கது.

தமிழகத்தின் தலைசிறந்த அரசுகளாகத் திகழ்ந்த சேர, சோழ, பாண்டிய அரசுகள் காலத்துக்குக் காலம் எழுச்சியும் வீழ்ச்சியும் உற்றது போன்று, ஈழத்தமிழரசும் காலத்துக்குக் காலம் எழுச்சியும் வீழ்ச்சியும் அடைந்திருக்கின்றது. பண்டைய ஈழத்து இலக்கியங்களுடன், அதனையொட்டி, முதலியார் இராசநாயகம் போன்றோரின் வரலாற்று நூல்களும் யாழ்ப்பாண அரசுக்கு முன்னர் கதிரவெளியிலும் (கந்தரோடையிலும்) சிங்கைநகரிலும் தமிழரசு நிலவியது பற்றிய செய்திகளை வெளிப்படுத்துகின்றன.

கடந்தகால அகழ்வாய்வுகளும் கந்தரோடை ஒரு தலைநகராக இருந்தமையை உறுதிசெய்கின்றன. இப்பகுதிகளிற் காணப்பட்ட பெருங்கற் பண்

பாட்டுச்சான்றுகளும் ரோம நாணயங்களும் பிறநாட்டுத் தொல்பொருட்களும் பண்டைக் காலக் கட்டட எச்சங்களும் மேலும் மெய்ப்பிக்கின்றன. 1980 - 90 ஆம் ஆண்டுகளுக்கிடையில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகளின்படி பூநகரிப்பகுதி தமிழரின் ஆட்சிமையமாக, தலைநகராக இருந்தமைக்குரிய தொல்லியற் சான்றுகள் பல கிடைத்துள்ளன. ஆயினும் தொடர்ச்சியான ஆய்வுகளை மேற்கொண்டே பூநகரி ஆட்சிமையத்தின் காலத்தைத் தெரிந்துகொள்ள முடியும்.




கந்தரோடைப் பகுதியில் அகழ்வாய்வின் போது கண்டெடுக்கப்பட்ட பௌத்த அடையாளங்கள் தமிழ்ப் பௌத்தத்தின் அடையாளங்கள் என்பது உறுதியானதும் கந்தரோடை அகழ்வாய்வினை நிறுத்திய சிங்கள அரசு, அகழ்வாய்வின் அறிக்கையை வெளியிடுவதையும் நிறுத்தி வைத்துவிட்டது.

இவற்றினால் 13 ஆம் நூற்றாண்டிலே நல்லூரிலே சிறப்புறத் திகழ்ந்த, கிழக்கிலங்கையையும் உள்ளடக்கிய யாழ்ப்பாணத் தமிழரசுக்கு முன்னர், கதிரவெளியிலும் (கந்தரோடையிலும்) பூநகரியிலும் தமிழரசு நிலவியது உறுதிப்படுத்தப்படுகின்றன.

மகாவம்சம், மணிமேகலை என்பன குறிப்பிடும் நாகதீபம், மணிபல்லவம் என்பன வட இலங்கைப்பகுதிகளாகும். எனவே வரலாற்றுக் காலத்திலிருந்தே ஈழத்திலே தமிழராட்சி மாறிமாறி எழுச்சியும் வீழ்ச்சியும் பெற்று வந்திருப்பதை உணர்ந்துகொள்ளமுடிகிறது.

ஈழத்தின் பண்டைய நாகதீபத் தமிழரசு, இடைக்காலத்தின் கதிரவெளித் தமிழரசு, சிங்கைநகர் மற்றும் மாந்தை, கிழக்கிலங்கைத் தமிழ்ச்சிற்

றரசுகள் பற்றி மேலும் அகழ்வாய்வுகள், வரலாற்று நூலாராய்ச்சிகள் மேற் கொண்டே கூடுதலான செய்திகளைப் பெற்றுக்கொள்ளவேண்டியுள்ளது.

யாழ்ப்பாண அரசின் தோற்றம் பற்றிய முழுமையான உண்மைகளைத் தமிழ் நூல்கள் எவற்றிலிருந்தும் தெளிவாகப் பெறமுடியவில்லை. ஆயினும் குலசேகர சிங்கை ஆரியன் முதல் கனகசூரிய சிங்கை ஆரியன் வரையான பத்து மன்னர்களின் ஆட்சிவரிசை பற்றிய சுருக்கமான செய்திகள் யாழ்ப் பாண வைபவமாலையிலிருந்து தெரியவருகின்றது. அவர்களது ஆட்சியாண் டுகள் பற்றி அதில் எதுவுங் கூறப்படவில்லை. ஆயினும், 6ஆம் பராக்கிரம பாகுவின் படைத்தளபதியும் வளர்ப்பு மகனுமான சப்புமல் குமாரையா என்ற செண்பகப்பெருமாள் கனகசூரிய சிங்கையாரியனை வெற்றிகொண்டு 17 ஆண்டுகள் யாழ்ப்பாண அரசை ஆண்டது பற்றிய காலம், கி. பி. 1450-1467 என வேறுபல நூல்களால் அறியமுடிகிறது. சிங்கள வரலாற் றுப் பேராசிரியர் கே. எம். டி சில்வா, ஜி. எஸ். மென்டிஸ் ஆகியோர் 1450 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கைத்தீவில் நிலவிய ஏனைய அரசுகளைவிட வலுவான அரசாக, ஏனைய பகுதிகளிலும் செல்வாக்குக் கொண்டிருந்த அரசாக யாழ்ப்பாண அரசு திகழ்ந்தது பற்றித் தமது ஆங்கில வரலாற்று நூல்களில் ஒப்புக்கொண்டுள்ளனர்

கி. பி. 1215 அளவில் பொலநறுவை மீது படையெடுத்து வெற்றிபெற்ற மாகன் சிங்களவர்களைத் துன்புறுத்தி அவர்களது உடைமைகளைப் பிடுங் கித் தமிழர்களுக்கு வழங்கினான் என்றும், சிங்களவரின் பௌத்த பள்ளி களைத் தன் படையினரின் பாடி வீடுகளாக மாற்றினான் என்றும், தமிழர், மலையாளிகளின் படைகளுடன் வந்தே இலங்கையைக் கைப்பற்றினானென் றும் சிங்கள நூல்கள் எடுத்துக்கூறுகின்றன. மாகன் பொலநறுவையிலிருந்து தலைநகரைத் தன் இறுதிக் காலத்திலே தமிழர் பகுதிக்கு மாற்றினான் என்றும் கூறப்படுகிறது. இவற்றிலிருந்து மீண்டும் புதிய தமிழரசு ஒன்று உருவாவதற்கான கால்கோள் மாகன் காலத்திலிடப்பட்டது என்பது தெளி வாகின்றது.

மாகனின் தம்பி விஜயபாகு என்பவன்தான் கந்தளாய்க் குளத்தைக் கட்டிய குளக்கோட்டன் என்றும் வரலாற்றாய்வாளர்கள் கூறுகின்றனர். குளக்கோட்டன் கோணேஸ்வரர் கோயில் உட்படக் கிழக்கிலங்கையிற் பல கோயில்களின் திருப்பணிகளைச் செய்தான் என்றும் அல்லை, வெண்டரசன், கந்தளாய் குளங்களைக் கட்டினான் என்றும் கூறப்படுகிறது.

மாகனைச் சாவக மன்னன் சந்திரபானு என்பான் தோற்கடித்த தாகவும் அதேநேரம் பாண்டிய நாட்டிலிருந்து படையெடுத்து வந்த குல சேகர பாண்டியனின் படைத்தலைவனான ஆரியச் சக்கரவர்த்தி என்பான் சந் திரபானுவை வெற்றிகொண்டதாகவும் அவன் யாப்பகூவவை வெற்றிகொண்டு ஈழத்து வெற்றியின் பின், குலசேகரசிங்கை ஆரியன் என்ற பெயரில் வட இலங் கையிலே தங்கி ஆட்சியை மேற்கொண்டான் என்றும் கூறப்படுகிறது.

எனவே 13 ஆம் நூற்றாண்டின் நடுப்பகுதியில் வட இலங்கையிலே தமிழ ராட்சி தொடங்கியது உறுதி செய்யப்படுகிறது.

இலங்கை முழுவதையும் ஒரு குடைக்கீழ் ஆண்டதாகக் கூறப்படும் முதலாம் பராக்கிரமபாகு (பாண்டிய வழித்தோன்றல்) வின் ஆட்சிக் காலத் துக்குப்பின் (1186) நிலையான ஆட்சி நிலவவில்லை. பொலநறுவை ஆட்சி

சிதறியது. அடுத்துவந்த 26 ஆண்டுகளில் தமிழரிடமும் சிங்களவரிடமுமாக 14 தடவை ஆட்சி மாற்றம் ஏற்பட்டது. அதனையடுத்துப் பாண்டிய நாட்டிலிருந்து படையெடுத்துவந்த பராக்கிரமபாண்டியன் பொலநறுவை ஆட்சியைக் கைப்பற்றி (1212-1215) மூன்று ஆண்டுகள் ஆட்சியை மேற்கொண்டான் பராக்கிரமபாண்டியனை வெற்றிகொண்டே மாகன் தன் ஆட்சியை 1215 இல் பொலநறுவையில் அமைத்துக்கொண்டான். பௌத்தர்களுக்கு எதிராகச் செயற்பட்ட மாகனுக்கு எதிராக எழுந்த பௌத்தர்களின் எழுச்சியால் மாகனின் ஆட்சி பொலநறுவையிலிருந்து வட இலங்கைக்கு மாற்றப்பட்டது சிங்களவராட்சி தெற்கு தென்மேற்கு நோக்கி நகர்ந்தது.

எனவே 1215 ஆம் ஆண்டுக்குப்பின் மாகனால் இலங்கையில் ஏற்படுத்தப்பட்ட அரசியல் மாற்றத்தையடுத்து, வடபகுதியிற் புதிதாக எழுந்த யாழ்ப்பாண அரசு கி. பி. 16 ஆம் நூற்றாண்டின் இறுதிவரை இலங்கையின் வலுவான அரசாகத் திகழ்ந்தது. யாழ்ப்பாண அரசின் மன்னர்களும் ஆட்சிட் காலங்களும் கீழே தரப்படுகின்றன.

| | | |
|---|---|---|
| 01. | குலசேகர சிங்கை ஆரியன் | 1268 - 1284 |
| 02. | குலோத்துங்க சிங்கை ஆரியன் | 1284 - 1292 |
| 03. | விக்கிரமசிங்கை ஆரியன் | 1292 - 1302 |
| 04. | வரோதய சிங்கை ஆரியன் | 1302 - 1325 |
| 05. | மார்த்தாண்ட சிங்கை ஆரியன் | 1325 - 1347 |
| 06. | குணபூஷின சிங்கை ஆரியன் | 1347 - |
| 07 | வரோதய சிங்கை ஆரியன் | - 1380 |
| 08. | செயவீர சிங்கை ஆரியன் | 1380 - 1410 |
| 09. | குணவீர சிங்கை ஆரியன் | 1410 - 1440 |
| 10. | கனகசூரிய சிங்கை ஆரியன் | 1440 - 1450 |
| | கோட்டையரசன் 6 ஆம் பராக்கிரமபாகுவின் படைத் தலைவன் சப்புமல் குமாரையா என்ற செண்பகப் பெருமாள் | 1450 - 1457 |
| | மீண்டும் கனகசூரிய சிங்கை ஆரியன் | 1467 - 1478 |
| 11. | சிங்கை பரராசசேகரன் | 1478 - 1519 |
| 12 | 1 ஆம் சங்கிலியன் | 1519 - 1565 |
| 13 | புவிராசபண்டாரம் காசிநாதர் | 1565 - 1570 |
| 14. | பெரியபிள்ளை | 1570 - 1582 |
| 15. | புவிராசபண்டாரம் | 1582 - 1591 |
| 16. | எதிர்மன்னசிங்கன் | 1591 - 1616 |
| 17. | சங்கிலிகுமாரன் (2 ஆம் சங்கிலியன்) | 1616 - 1619 |

குலசேகர சிங்கை ஆரியன் (1268 - 1284)

ஆரியச் சக்கரவர்த்தி என அழைக்கப்பட்ட இவன் மாறவர்மன் குலசேகர பாண்டியனுக்கு அமைச்சராகவும் படைத்தலைவனாகவும் விளங்கியவன் மதுகங்கன் என்னும் இயற்பெயரைக் கொண்ட இவன் பாண்டிநாட்டின் நல்லூரைச் சேர்ந்தவன். இவன் ஈழத்தின் மீது படையெடுத்துவந்து யாப்பகூவ அபயகிரிக் கோட்டையை வெற்றிகொண்டதுடன் புத்தரின் திருப்பல்லை (புத்ததந்த தாதுவை) யும் கைப்பற்றிக்கொண்டு சென்று குலசேகர பாண்டிய மன்னனிடம் ஒப்படைத்தவன். தனது மன்னனுக்கு மதிப்பளிக்கும்

வகையில் அவனின் பெயரைத் தான் சூடிக்கொண்டு, தனது ஊரான நல்லூர் எனும் பெயரில் யாழ்ப்பாணத்தில் ஒரு நகரை அமைத்து, யாழ்ப்பாணத்திலிருந்து ஆட்சி நடத்தலானான்.

(பாண்டி நாட்டுக்குறிப்புகளிலிருந்தும் சிங்கள தமிழ் வரலாற்று இலக்கிய நூல்களிலிருந்தும் பெறப்பட்ட செய்திகளை வைத்து இந்த முடிவே பொருத்தமான முடிவாகக் கருதப்படுகிறது.)

குலோத்துங்க சிங்கை ஆரியன் (1284 - 1292)

இவன் வயல் நிலங்களைத் திருத்தி, வேளாண் தொழிலை ஊக்குவித்து நாட்டின் செல்வத்தைப் பெருக்கிக் குடிமக்களை மகிழ்ச்சியாகவும் நாட்டை அமைதியாகவும் வைத்து ஆட்சியை நடத்திவந்தான்.

விக்கிரம சிங்கையாரியன் (1292 - 1302)

இவன் ஆட்சிக் காலத்திற் பௌத்தர்களுக்கும் இந்துக்களுக்குமிடையே இறைநெறி தொடர்பாக ஏற்பட்ட கைகலப்பில் 2 இந்துக்கள் (தமிழர்கள்) கொல்லப்பட்டு பலர் காயப்படுத்தப்பட்டனர். அதனை அறிந்த விக்கிரம சிங்கையாரியன் அச்சிக்கல் பற்றி உசாவல் செய்து கலவரத்துக்குத் திட்டமிட்ட புஞ்சிபண்டா என்பவனையும் மேலும் 17 சிங்களவர்களையும் சாவொறுப்பு (மரணதண்டனை) க்குள்ளாக்கி மேலும் பலரைச் சிறையிலிட்டான். இதனால் அச்சமுற்ற சிங்கவர்கள் தெற்குக்கு இடம்பெயர்ந்தனர்.

வரோதய சிங்கையாரியன் (1302 - 1325)

இவன் ஆட்சிக்காலத்தில் நாட்டில் அமைதி நிலவியது

மார்த்தாண்ட சிங்கையாரியன் (1325 - 1347)

இவன் ஆட்சிக் காலத்திற்றான் இஸ்லாமிய நாடோடியான இபன் பற்றூற்றா இலங்கைக்கு வந்து யாழ்ப்பாண அரசின் சிறப்பைப்பற்றி வியந்து குறிப்பெழுதி வைத்தான். யாழ்ப்பாண அரசனின் நூறுக்கும் மேற்பட்ட கப்பல்கள் வணிகத்திலீடுபட்டதையும் முத்துக்குளிப்பில் யாழ்ப்பாண மன்னர் பெரும் செல்வம் திரட்டியதையும் தான் கண்டதாகவும் ஆற்றலுள்ள அரசாக யாழ்ப்பாண அரசு திகழ்ந்ததாகவும் உலகுக்கு அறியவைத்தான்.

குணபூஷண சிங்கையாரியன் (1347 - )

இவன் தன் ஆட்சிக்காலத்திலே கல்வியும் செல்வமும் பெருக நல்லாட்சி நடத்தி நாட்டில் அமைதி காத்தான்.

வரோதய சிங்கையாரியன் ( - 1380)

இவன் ஆட்சிக் காலத்திற் சிங்களவர்களால் எழுந்த கலகங்களைத் தன் வீரத்தினாலடக்கியதுடன் வன்னியர்களின் கலகங்களையும் அடக்கினான்.

அதுமட்டுமன்றி எதிரிகளிடம் தன் ஆட்சியை இழந்த சந்திரசேகர பாண்டியன், பாண்டிய நாட்டிலிருந்து உதவிகோரி வந்தபோது யானைப் படை உட்படத் தனது படைகளையும் பெருஞ் செல்வங்களையும் கொடுத்துதவி அவன் ஆட்சியை மீட்டுக்கொடுத்தான்.

வன்னியர் சிலர் வரோதய சிங்கையாரியனை எதிர்க்கச் சிங்கள மன்னனிடம் உதவி கோரிச் சென்றபோது யாழ்ப்பாண அரசர் மீதான அச்சத்தினால் அவன் உதவ மறுத்துக் கைவிரித்தான். தமது முயற்சியை வரோதய சிங்கையாரியன் தெரிந்துவிடக்கூடும் என்ற அச்சத்தினால் வன்னியர் பெருஞ்செல்வங்களுடன் வரோதய சிங்கையாரியனைக் கண்டு மன்னிப்புக் கோரினர். இவன் ஒரு நாள் இரவு உறக்கத்தில் இறந்ததால் இவன் சாவு வகைதெரியாச் (மர்மச்) சாவாக அமைந்தது.

### செயவீர சிங்கையாரியன் (1380 - 1410)

இவன் காலத்திலே முத்துச் சலாபம் குறித்து எழுந்த பிணக்கினால் சிங்கள மன்னன் 5 ஆம் புவனேகபாகுவுடன் போர் செய்து வெற்றிகொண்டு இலங்கை முழுவதையும் 12 ஆண்டுகள் தன் குடைக்கீழ்க் கொண்டுவந்தான் என யாழ்ப்பாண வைபவமாலை கூறுகிறது. அதன்பின் தனக்குத் திறை செலுத்தி ஆளும்படி 5 ஆம் புவனேகபாகுவுக்குத் தென்பகுதியை ஒப்படைத்தான். 5 ஆம் புவனேகபாகுவும் அவன் வழி வந்தோரும் தொடர்ந்தும் யாழ்ப்பாண மன்னருக்குத் திறை செலுத்திவந்தனர்.

### குணவீர சிங்கையாரியன் (1410 - 1440)

தொடர்ந்து யாழ்ப்பாண மன்னர்களுக்குச் செலுத்திவந்த திறையைப் பராக்கிரமபாகு வழங்க மறுத்ததால் குணவீரசிங்கையாரியன் கம்பளை நோக்கித் தரைப்படையையும் கோட்டை நோக்கிக் கடற்படையையும் அனுப்பினான். கம்பளையிற் சில பகுதிகளைப் பிடித்து அங்கு தமிழர்களைக் குடியமர்த்தியதுடன் தரைப்படை திறையும் பெற்று மீண்டது. கோட்டைக்குச் சென்ற கடற்படை தோல்வியுடன் திரும்பியது.

### கனகசூரிய சிங்கையாரியன் (1440 - 1450)

இவனது ஆளுமையற்ற ஆட்சிக் காலத்தில் வன்னியரும் சிங்களவரும் அடிக்கடி கிளர்ச்சிகளில் இறங்கினர். இச்சூழ்நிலையில் 6 ஆம் பராக்கிரமபாகு தன் படைத்தலைவனும் வளர்ப்புப் பிள்ளையுமான சப்புமல் குமாரையா என்ற செண்பகப்பெருமாளை யாழ்ப்பாணத்துக்குப் படையெடுக்குமாறு பெரும் படையுடன் அனுப்பிவைத்தான் போரிலே தோல்வியுற்ற கனகசூரிய சிங்கையாரியன் தன் மனைவியுடனும் இரு பிள்ளைகளுடனும் தமிழகத்திற்குத் தப்பிச்சென்றான். யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய சப்புமல் குமாரையா என்ற செண்பகப்பெருமாள் 17 ஆண்டுகள் தமிழர்களைக் கொடுமைப்படுத்தி, கொடுங்கோலாட்சி மேற்கொண்டான்.

தமிழகம் சென்ற கனகசூரிய சிங்கையாரியனின் பிள்ளைகள் இருவரும் அங்கேயே கல்விகற்று, பெரும் படையுதவியும் பெற்று இழந்த ஆட்சியைத் தந்தைக்கு மீட்டுக்கொடுக்கும் நோக்குடன் யாழ்ப்பாணம் வந்தனர். அதே நேரம் கோட்டையரசன் 6 ஆம் பராக்கிரமபாகு இறந்ததால் கோட்டை ஆட்சியில் அமரும் நோக்குடன் சப்புமல் குமாரையா விஜயபாகு என்பவனிடம் யாழ்ப்பாண அரசை ஒப்படைத்துக் கோட்டைக்குத் திரும்பினான்.

1467 இல், படையுடன் வந்த கனகசூரிய சிங்கையாரியனும் புதல்வர்கள் இருவரும் விஜயபாகுவுடன் கடும்போரில் ஈடுபட்டு அவனைத் தோற்கடித்துக் கொன்றுவிட்டு மீண்டும் யாழ்ப்பாண ஆட்சியைக் கைப்பற்றினர்.

கனகசூரிய சிங்கையாரியன் யாழ்ப்பாண மன்னனாக மீண்டும் முடிசூடிக் கொண்டான்.

சிங்கைப் பரராசசேகரன் (1478 - 1517)

1478 இல், அரியணையேறிய கனகசூரிய சிங்கையாரியனின் மூத்த புதல்வன் சிங்கைப் பரராசசேகரன் தன் ஆட்சிக்காலத்திலே தமிழ்ச்சங்கம் ஒன்றை நிறுவித் தமிழ்த் தொண்டாற்றினான். கல்விப்புலமையும் ஆற்றலும் கொண்ட அவன் தம்பி செகராசசேகரன் இந்தியாவிலிருந்து பல தமிழ்மொழி வடமொழி நூல்களைத் தருவித்தும் பரராசசேகரம் (மருத்துவநூல்) செகராசசேகரம் (சோதிட நூல்), இரகுவம்சம் (காவிய நூல்) போன்ற நூல்களைத் தானே இயற்றியும் பெருந் தமிழ்த்தொண்டாற்றியதுடன் நாட்டின் ஏனைய புலவர்களையும் அறிஞர்களையும் புரந்தான்.

சிங்கைப் பரராசசேகரனுக்கு 4 புதல்வர்களும் 1 புதல்வியும் இருந்தனர். தந்தைக்குப்பின் மூத்த புதல்வர்கள் இருவரும் அடுத்தடுத்து அரியணையேறியபோதிலும் இரு ஆண்டுகளுக்குள் 4 ஆவது மகன் சங்கிலியன் அரியணையேறினான்.

1 ஆம் சங்கிலியன் (1519 - 1565)

இவன் தனது மூத்த அண்ணன்மார் இருவரையும் அவர்கள் அரியணையேறியதும் சூழ்ச்சியாற் கொன்றான் என்றும் 3 ஆவது அண்ணன் பரநிருபசிங்கன் நாட்டில் இல்லாதபோது ஆட்சியைக் கைப்பற்றினான் என்றும் சிலராற் கூறப்படுகிறது.

ஆயினும் ஆளுமையும், நாட்டுப்பற்றும், விடுதலையுணர்வும் கொண்டவனான 1 ஆம் சங்கிலியன் போர்த்துக்கேயரின் ஊடுருவலைத் தன் நாட்டுக்கு வரவிடாது எல்லா வழிகளிலும் செயற்பட்டான். இறைநெறி மாற்றத்தை வன்கவர்வுக்கான (ஆக்கிரமிப்புக்கான) ஊடுருவல் என எதிர்த்து நின்றான். 1543 இல் யாழ்ப்பாணக் கரையில் ஒதுங்கிய போர்த்துக்கேய மரக்கலங்களைக் கைப்பற்றி அதில் இருந்த பெருஞ்செல்வங்களைத் தன் களஞ்சியத்திற் சேர்ப்பித்தான். போர்த்துக்கேயர் தொடர்பு கொண்டபோதும் அவற்றைக் கொடுக்க மறுத்தான்.

போர்த்துக்கேயரை யாழ்ப்பாண மண்ணைவிட்டு மட்டுமன்றி இலங்கைத்தீவை விட்டே விரட்டியடிக்கவேண்டும் என்ற உறுதியான குறிக்கோளுடன் 1ஆம் சங்கிலியன் செயற்பட்டான். அவன் 1545 இல் சீதவாக்கை கண்டி அரசருடன் இணைந்து போர்த்துக்கேயருக்கெதிராகப் போரிடத்தன் படைகளை அனுப்பினான். 1552 இல் புவனேகபாகு இறந்து அவன் பேரன்



யாழ்ப்பாண அரசின் காசொன்றின் இரு பக்கங்களினதும் உருவகைகள்.



ஆட்சிபீடமேறியதையடுத்து, போர்த்துக்கேயருக்கு எதிராகப் போரிட உதவி கோரி வந்த விதியபண்டாரவுக்கு உதவ ஒப்புக்கொண்டு அதற்கான நடவடிக்கைகளில் இறங்கினான். அந்நேரத்தில் எதிர்பாராமல் நடைபெற்ற குண்டுவெடிப்பையடுத்து நிகழ்ந்த ஒரு குழப்பத்தில் விதியபண்டார கொல்லப்பட்டான். அதனையிட்டுச் சங்கிலியன் பெருந்துயருற்றான்.

யாழ்ப்பாண மண்ணிலே தமது ஊடுருவலுக்கு இடம்தராமல் தமக்கு எதிராகச் செயற்படும் சிங்கள மன்னர்களுக்குப் பேருதவிகள் செய்துவந்ததால், 1 ஆம் சங்கிலியன்மீது சீற்றங்கொண்ட போர்த்துக்கேயர் அவன் மீது பெரும் படையெடுப்பை மேற்கொண்டனர்.

1560 ஆம் ஆண்டிற் பெரும் படையெடுப்பை மேற்கொண்டு 77 கப்பல்களிற் கரையூரில் வந்திறங்கிய போர்த்துக்கேயப் படையினரை, நல்லூரில் எதிர்கொண்டு நேருக்குநேர் கடும் போரில் ஈடுபட்ட 1 ஆம் சங்கிலியன், பெரும் வலுவுள்ள படைக்கலங்களுடன் வந்த போர்த்துக்கேயப் படைகளைச் சிதறடிக்கும் உத்தியாக, நல்லூரிலிருந்து இருபாலைக்கும் பின் கோப்பாய்க்கும் அதன்பின் பச்சிலைப்பள்ளிக்கும் அதனையடுத்து வன்னிக்குமெனத் தன் படையுடன் பின்வாங்கிச் சென்று, 1200 போர்வீரர்களைக் கொண்ட போர்த்துக்கேயப் படையைக் களைக்கவைத்தான். பின் சூழ்நிலையைப் பயன்படுத்தி அவர்களுடன் அமைதிப் பொருத்தனையும் செய்து திறை செலுத்தவும் ஒப்புக்கொண்டு அவர்கள் எதிர்பாராத வகையில் திடீரெனத் தாக்கி நிலைகுலையவைத்து, அவர்களின் படைக்கலங்கள் முழுவதையும் பறித்தெடுத்துக்கொண்டு, அவர்களை விரட்டியடித்தான். இது அவன் கடைப்பிடித்த சிறந்த போர் உத்தியாகும்.

1564 ஆம் ஆண்டிற் சீதவாக்கை மன்னன் மாயாதுன்னைக்குத் துணையாகப் போர்த்துக்கேயரை எதிர்த்துப் போரிடவெனத் தென்னிந்தியாவிலிருந்து வந்த படைகளைத் தனது ஆட்சிப் பகுதிக்கூடாக 1 ஆம் சங்கிலியன் அனுப்பிவைத்தான் இவ்வாறு 1 ஆம் சங்கிலியன் தனது வாழ்நாளில் வேற்று நாட்டவரைத் தன் மண்ணில் வேரூன்றவிடாது தடுத்தது மட்டுமன்றி, தனக்கு வரவிருந்த பேரிடர்களையும் துச்சமென மதித்து, போர்த்துக்கேயருக்கு எதிராகப் போராடிய சிங்கள மன்னர்களுக்கும் பெருந்துணையாக நின்று உதவி, தன் கொள்கை உறுதியுடன் நாட்டுப்பற்றையும் வெளிப்படுத்தினான். 1 ஆம் சங்கிலியனே யாழ்ப்பாண அரசில் கூடுதலான காலம் (ஏறத்தாழ 46 ஆண்டுகள்) ஆட்சியமைத்த தலைசிறந்த மன்னனாவான்.

**1 ஆம் புவிராச பண்டாரம் (1565 - 1570)**

1 ஆம் சங்கிலியனுக்குப் பின் அரியணையேறிய புவிராசபண்டாரத்தின் காலத்தில் யாழ்ப்பாண அரசிற் பெருங் குழப்பம் நிலவியது.

**பெரியபிள்ளை (1570 - 1484)**

இவன் தஞ்சாவூர் நாயக்கர்களின் உதவிபெற்று மன்னாரில் நிலைகொண்டிருந்த போர்த்துக்கேயரை வெளியேற்ற முயற்சி மேற்கொண்டானாயினும் முயற்சி கைகூடவில்லை. இவன் காலத்திலேதான் போர்த்துக்கேயர் யாழ்ப்பாண மன்னரிடம் முதன்முதலிலே திறை பெற்றனர்,

2 ஆம் புவிராச பண்டாரம் (1584 - 1591)

இவன் 1590 இல் மன்னாரில் நிலைகொண்டிருந்த போர்த்துக்கேயரை அகற்றும் முயற்சியில் இறங்கினான். இதற்காகத் தஞ்சாவூர் நாயக்கர்களிடமும் கள்ளிக்கோட்டை சமோரினிடமும் படையுதவிகளை நாடினான். ஆயினும் இவன் முயற்சி கைகூடவில்லை. 1591 இல், போர்த்துக்கேயர் யாழ்ப்பாணத்தின் மீது பெரும் படையெடுப்பை மேற்கொண்டனர். எதிர்த்து நின்ற புவிராசபண்டாரம் போர்த்துக்கேயராற் கொல்லப்பட்டு அவன் தலை ஈட்டியிற் கொழுவப்பட்டு மக்களின் பார்வைக்கு வைக்கப்பட்டது. போர்த்துக்கேயருக்கு அவன் மீதிருந்த கடுஞ்சினத்தை இதனால் உணரலாம்.

எதிர்மன்ன சிங்கன் (1591 – 1617)

1591 இல், புவிராசபண்டாரம் போர்த்துக்கேயராற் கொல்லப்பட்டபின் அதற்கு முன்னர் ஆட்சிசெய்த பெரியபிள்ளையின் புதல்வனான எதிர்மன்ன சிங்கனை, போர்த்துக்கேயர் சில கட்டுப்பாடுகளுடன் ஆட்சியில் அமர்த்தினர்.

1. போர்த்துக்கேய அரசுக்கு நம்பிக்கையாக இருத்தல்
2. கத்தோலிக்க இறைநெறிப் பரப்புரைக்கு இடமளித்தல்
3. திறை செலுத்துதல்

இந்த மூன்று கட்டுப்பாடுகளையும் ஏற்று அரியணையேறிய எதிர்மன்ன சிங்கன் வெளிப்படையாகப் போர்த்துக்கேயருக்குச் சார்பாக இருப்பதாகக் காட்டிக்கொண்டபோதிலும், மறைமுகமாகச் சைவநெறியினருக்குச் சார்பாகச் செயற்பட்டதுடன் போர்த்துக்கேயருக்கு எதிராகப் போராடிய கண்டி மன்னன் விமலதர்மசூரியனுக்கும், சேனரதனுக்கும் தென்னிந்தியாவிலிருந்து படையுதவிகளைத் தனது நாட்டினூடாக அனுப்புவதற்கு இசைவு வழங்கினான். இவனது ஆட்சி 1617 வரை நீடித்தது.

2 ஆம் சங்கிலியன் (1617 – 1619)

எதிர்மன்ன சிங்கன் இறக்கும்போது தனது 3 அகவைக் குழந்தையை அரியணையிலேற்றப் போர்த்துக்கேயரின் இசைவைக் கோரியிருந்தான். அதற்கிடையில் அரச குடும்பத்தினரில் ஒருவனான சங்கிலிகுமாரன் அரச குடும்பத்தினரிற் பலரைக் கொன்று தானே அரசன் என அறிவிக்கை செய்தான். 2 ஆம் சங்கிலியனான அவன் ஆட்சியமைக்கப் போர்த்துக்கேயர் இசைவு தெரிவித்தபோதிலும் அவனுக்கு எதிராக உள்நாட்டில் எழுந்த கலகங்களை அடக்க அவன் போர்த்துக்கேயரிடம் உதவிகோரியபோது உதவி வழங்க மறுத்துவிட்டனர். எனவே 2 ஆம் சங்கிலியன் தஞ்சை நாயக்கர்களிடமிருந்து மறைமுகமாகப் படையுதவி பெற்று, தனக்கு எதிரான கிளர்ச்சிக்காரர்களை அடக்கினான்.

இலங்கைத்தீவின் ஏனைய கரையோரப் பகுதிச் சூழ்நிலைகள் தமக்குச் சார்பாக வந்த நிலையில், யாழ்ப்பாணத்தையும் கைப்பற்ற முடிவெடுத்த போர்த்துக்கேயர் 1619 இல் ஒலிவேரா தலைமையில் ஒரு படையை அனுப்பினர். 2 ஆம் சங்கிலிய மன்னனுக்கு உள்நாட்டில் இருந்த எதிர்ப்பும் போர்த்துக்கேயருக்குச் சார்பாக இருந்தது.

கடல் வழியாகவும் தரைவழியாகவும் வந்த போர்த்துக்கேயர் படை 2 ஆம் சங்கிலியனிடம் திறை செலுத்துமாறும் தஞ்சை நாயக்கர் படைகளைத் தம்மிடம் ஒப்படைக்குமாறும் நெருக்குதல் கொடுத்தது.

திறைசெலுத்த ஒப்புக்கொண்ட போதிலும், 2 ஆம் சங்கிலியன் தனக்கு தவிக்கு வந்த தஞ்சை நாயக்கர் படையைப் போர்த்துக்கேயரிடம் ஒப்படைக்க மறுத்துத் தஞ்சைக்குத் திருப்பியனுப்புவதாகக் கூறினான். எனினும் தஞ்சை நாயக்கர் படைகளுக்கும் போர்த்துக்கேயர் படைகளுக்குமிடையே எதிர் பாராமற் சண்டைமூண்டு தஞ்சைப்படை தோற்கடிக்கப்பட்டது. எஞ்சிய தஞ்சைப்படைகளுடன் தமிழகம் தப்பிச் செல்ல முயன்ற 2 ஆம் சங்கிலியனைப் போர்த்துக்கேயர் பிடித்து, கோவாவுக்குக் கொண்டு சென்று 1621 ஆம் ஆண்டிலே தூக்கிலிட்டனர்.

2 ஆம் சங்கிலியனின் மறைவோடு நான்கு நூற்றாண்டுகளாக நந்திக் கொடியின் கீழ் நிலவிய யாழ்ப்பாணத் தமிழரசு முடிவுக்கு வந்தது.

பயிற்சி:

01. ஐரோப்பியர் வருகையின்போது இலங்கைத்தீவில் இருந்த அரசுகள் எவை? அவை எப்போது தோற்றம் பெற்றன.

02. இஸ்லாமிய நாடோடியான இபன்பற்றூற்றா இலங்கை வந்தபோது யாழ்ப்பாண அரசனாக இருந்தவன் யார்?

03. யாழ்ப்பாண அரசுக்குமுன் இலங்கையில் இருந்த பண்டைத்தமிழரசுகள் எவை?

04. பொலநறுவையிலிருந்து கடைசியாக ஆண்ட தமிழ்மன்னன் யார்?

05. கி. பி. 1215 இல், இலங்கைமீது படையெடுத்த மன்னர் யார்?

06. யாழ்ப்பாண அரசின் முதல் அரசன் யார்?

07. 350 ஆண்டுகளுக்கும்மேல் நிலவிய யாழ்ப்பாண அரசு சிங்களவராட்சியின் கீழ் எத்தனை ஆண்டுகள் இருந்தது?

08. பாண்டிய மன்னனுக்குப் படையுதவி செய்த யாழ்ப்பாண அரசன் யார்?

09. இலங்கை முழுவதையும் 12 ஆண்டுகள் தன்குடைக்கீழ்க் கொண்டுவந்த யாழ்ப்பாண அரசன் என்று யாழ்ப்பாண வைபவமாலை கூறும் அரசன் யார்?

10. சிங்கள அரசர்களுக்கெதிராகக் கம்பளைக்குப் படையனுப்பி வெற்றி கொண்ட யாழ்ப்பாண அரசன் யார்?

11. எந்த யாழ்ப்பாண அரசன் காலத்திற் சப்புமல்குமாரையா என்ற செண்பகப்பெருமாள் யாழ்ப்பாண அரசைக் கைப்பற்றினான்

12. 1 ஆம் சங்கிலியனின் ஆட்சிக்காலம் என்ன?

13. 1 ஆம் சங்கிலியனுக்கு எதிராக எந்த ஆண்டிற் போர்த்துக்கேயர் படையெடுத்தனர்?

14. கி. பி. 1564 ஆம் ஆண்டிற் சிங்கள மன்னன் மாயாதுன்னைக்கு, சங்கிலியன் எவ்வகையில் உதவினான்?

15. 1591 இல் எந்த யாழ்ப்பாண அரசன்மீது போர்த்துக்கேயர் படையெடுத்தனர்? 2 ஆம் சங்கிலியன் போர்த்துக்கேயராலே தோற்கடிக்கப்பட்டது எந்த ஆண்டில்?

16. யாழ்ப்பாண அரசு எவ்வளவு காலம் நீடித்திருந்தது?

17. யாழ்ப்பாண அரசின் கொடி எது?

# அட்டைப் படத்துக்கு எழிலூட்டுபவை

- ★ சங்கிலிய மன்னனும் நந்திக்கொடியும்
- ★ யாழ்ப்பாணத் தமிழரசின் காசு [சேது நாணயம்]
- ★ திருக்கோணேசர் மலையும் கோயிலும்
- ★ ஈமத்தாழி பொம்பரிப்பு [புத்தளம்]
- ★ கல்வட்டம மாமடுவ [வவுனியா]
- ★ கல்மேசை கதிரவெளி [மட்டக்களப்பு]

சிங்கள அரசின் பொருண்மியத் தடையினால் காகிதாதிகள், அச்சுப் பொருள்களுக்கு நிலவுகின்ற பெருந் தட்டுப்பாடுகளுக்கிடையில் வெளியிடப் பட்டிருக்கும் இந்நூலை நீண்டகாலம் பேணிக்காத்துப் பயன்படுத்துமாறு மாணவச் செல்வங்களை வேண்டுகின்றோம்,

கன்னி நிலம் பதிப்பகம் பாலிநகர், வவுனிக்குளம்.